செந்தமிழ்ச் செல்வி

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக

மணிவிழா ஆண்டு

1920 — 1980



அரசு.—

சிலம்பு-௫௪] வள்ளுவர் ஆண்டு-௨௦௧௧, வைகாசி June '80 [பரல்-௧௦.

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உகைக, வைகாசி சூன் 1980	பரல் கo

தேர்தலும் இந்தியும்

நம் நாட்டில் பேராயக் கட்சி (காங்கிரசுக் கட்சி) நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட நாள் முதல் மொழிச் சிக்கலையும் இணைத்துக்கொண்டே வளர்ந்துள்ளது. நாட்டு விடுதலையைவிட இந்தி மொழியினை அரியணை ஏற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகின்றது. 1938இல் இந்தி தமிழ்நாட்டின் மீது திணிக்கப்பெற்றது. அதை எதிர்த்து மறைத்திரு. மறைமலையடிகளார் தலைமையில் தமிழக மக்கள் திரண்டனர். பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் சிறை சென்றனர். அதன் விளைவாகப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக வைக்கப்பெற்ற இந்தி திரும்பப் பெறப்பட்டது.

அது முதல் இந்தியை எந்தெந்த வழிகளில் திணிக்க இயலுமோ அந்தந்த வழிகளில் தொடர்ந்து திணித்து வருகின்றது மைய அரசு. விடுதலைக்குப்பின் பேராயக் கட்சி நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றது முதல் இந்தியும் ஆங்கிலத்துடன் இணைந்து ஆட்சி மொழியாக உயர்ந்தது காங்கிரசார் அனைவரும் ஆங்கிலத்தை அறவே நீக்கிவிட்டு இந்தியை மட்டுமே ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்கள் எண்ணத்தைச் செயல்படுத்தும் வகையில் மைய அரசு அலுவலர்களும் வடமாநில அரசுகளும் ஆட்சி முழுவதையும் இந்தி மயமாக்குவதில் கண்ணுங்கருத்துமா யிருக்கின்றன. அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள், பொதுமக்களுக்கு விடுக்கும் அறிவிப்புகள் ஆகியவற்றின் வாயிலாகவும் இந்தியை மெல்ல மெல்லப் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். இவ் வகையான இந்தித் திணிப்பைத் தென் மாநிலங்கள் மட்டுமே, அதிலும் குறிப்பாகத் தமிழ்நாடு மட்டுமே

அவ்வப்போது தனது இந்தி யெதிர்ப்புப் போராட்டங்களின்மூலம் அணைபோட்டுத் தடுத்து வருகின்றது.

இந்திய நாட்டு முதல் தலைமை அமைச்சரான நேரு பெருமகனார் முதல் குடியரசுத் தலைவர் பலரும், தலைமை அமைச்சர் பலரும், நடுவணரசு அமைச்சர்களும் அவ்வப்போது தென்னாட்டிற்கு-அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது "இந்தியைத் திணிக்கமாட்டோம். பிற மொழி பேசுவோர் விரும்பும் வரை ஆங்கிலமே நீடிக்கும்" என்று உறுதி கூறுவார்கள். அங்ஙனம் கூறும் அவர்கள் வடநாட்டிற்குத் திரும்பியவுடன் தாம் கூறியதை மறந்துவிடுகின்றனர். மற்றும் சிலர் 'எவ்வளவு நாளைக்கு நாம் அன்னிய மொழியாகிய ஆங்கிலத்தை வைத்துக் கொள்வது? எப்படியும் இந்தி பேசாதவர்கள் இந்தியைக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும்' என்று பேசத் தொடங்கி விடுகின்றனர்.

'இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் இந்தியுடன் சேர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும்' என்று நாடாளுமன்றத்தில் வாக்குறுதி தந்த நேரு பெருமகனார் தமது கூற்றைப் பேச்சு அளவிலேயே விட்டு விட்டார். அதைச் சட்டமாக ஆக்கவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடாமலேயே வாளா இருந்து விட்டனர்.

இஃதிவ்வாறிருக்க நடுவணரசில் எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வருமுன் தேர்தல் நேரத்தில் "பிறர்மீது இந்தியை நாங்கள் திணிக்கமாட்டோம். மற்றக் கட்சியினர்தாம் இந்தி வெறியர்கள், நாங்கள் அத்தகையவரல்லர்" என்று ஒவ்வொரு முறையும் கூறுவது வழக்கம். முன்பு பேராயக்கட்சி இவ்வாறு கூறியது. இடையில் வந்த சனதா கட்சியினரும் அங்ஙனமே கூறினர். இப்போது மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள பேராயக் கட்சியும் அதனையே கூறுகிறது.

அண்மையில் சட்டமன்றத் தேர்தலுக்காகத் தமிழகத்தில் சூறவளிச் சுற்றுப் பயணம் செய்த இந்திய முதன்மை அமைச்சர் இந்திராகாந்தி அம்மையாரும் "இந்தி திணிக்கப்படமாட்டாது" என்ற உறுதிமொழியை வழக்கம்போல வாரி வழங்கிச் சென்றிருக்கிறார். அவர் தில்லி திரும்பியதும் இதைப்பற்றி எண்ணிப்பார்க்கவே நேரமிராது. ஆனால், மைய அரசு அலுவலர்களோ அல்லது இந்தி வெறி பிடித்த உயர் அதிகாரிகளோ இதுபற்றிக் கவலைப் படுவதில்லை. என்றும் போல எதிலும் இந்தியை மெல்ல மெல்லத் திணித்துக்கொண்டே யிருக்கிறார்கள்.

எனவே, இனித் தமிழக மக்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தேர்தல்கால வாக்குறுதியையன்று. நேருபெருமகனார் நாடாளு

மன்றத்தில் வழங்கிய உறுதிமொழியினைச் சட்ட வடிவில் காணவே அவர்கள் விழைகின்றனர்.

இந்தி தொடர்பு மொழியாக இருந்தால்தான் நாட்டின் ஒருமைப்பாடு காப்பாற்றப்படும் என்று கூக்குரலிடும் வடநாட்டுத் தலைவர்கள் தம் நாட்டு மக்களைப் பார்த்து ஒவ்வொருவரும் தென்னாட்டு மொழிகளில் ஒன்றைக் கற்றால்தான் அந்த ஒருமைப் பாடு நிலைக்கும் என, ஏன் சொல்லக்கூடாது ?

மேலும், வடநாட்டில் ஆங்கிலம் தெரிந்தவர்கள்கூடப் பிற மொழியினருடன் பேசும்போது ஆங்கில மொழியைப் பயன் படுத்தாமல் பிடிவாதமாக இந்தியில்தான் பேசுகின்றனர். இதனாலும் இந்தி பேசாத மக்கள் பெரிதும் இடர்ப்படுகின்றனர். ஆங்கிலத்தை அந்த அளவுக்கு அவர்கள் வெறுப்பானேன்? இந்தியத் துணைக் கண்டத்துக்கு இந்தி தொடர்பு மொழியாக இருக்கட்டும் என வாதிடும் இவர்கள், உலகத் தொடர்புக்குப் பயன்படக்கூடிய ஆங்கிலத்தைப் புறக்கணிக்கலாமா ? ஆங்கி லத்தைப் புறக்கணிப்பதுதான் இந்திய ஒருமைப்பாட்டுக்கு அடை யாளம் என்றால் இந்தப் புதுமைக்கால நிலைக்கு அஃது ஒவ்வுமா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்திதான் இந்தியாவை இணைத்து வைக்க முடியுமென்றால் இன்று அசாம் மாநிலத்தில் இவ்வளவு கிளர்ச்சி தேவையில்லையே ! இந்தி பேசும் அனைவரும் இந்தியர்கள் என்று அவர்கள் எண்ணா ததற்குக் காரணம் இந்தி மொழியைக் காரணமாக வைத்துக் கொண்டு அம் மொழி பேசுவோர் அந்த மாநிலத்துக்காரர்கள் மீது செலுத்தும் ஆதிக்கம் தானே? எனவே, நல்ல மனம்தான் இந்தியாவை ஒன்றாக இணைக்க முடியும். இந்திய மக்களை ஒன்றாக இணைக்க விரும்புவோர்க்கு, உண்மையிலேயே அந்த எண்ண மிருக்குமானால், இந்தியைத் திணிப்பதை விட்டுவிட வேண்டும். இதுவே ஒருமைப்பாட்டுக்கு வழியாகும்.

எனவே, இனியும் காலந் தாழ்த்திக்கொண்டிராது இந்திரா அம்மையார் மேற்கூறியவாறு இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீட்டிக்க இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தத்தை உடனடியாகச் செய்தல்வேண்டும். இந்தி பேசாத, இந்தி தாய்மொழியாக இல்லாத மாநிலங்களும் கட்சி வேறுபாடின்றி ஒருமனதாக இத்தகைய சட்டத்திருத்தம் வரப் பாடுபட வேண்டும். இது நிறைவேற அறிஞர்களும் அரசியல் வாதிகளும் இணைந்த நிலையான 'இந்தி எதிர்ப்பு அமைப்பு' ஒன்று அமைத்து இந்தி எதிர்ப்புக் கனல் அவிந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுதல்வேண்டும். தமிழ்நாடு இதில் கண்ணுங் கருத்துமாக இருத்தல்வேண்டும்.

தெ. பொ. மீ.யின் திரிபாராய்ச்சி

[ஞா. தேவநேயன்]

(முன் இதழ் சஉ௦ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூற்று : தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்

I. நூன்மரபு

ஒலியன்களின் பட்டி, அவற்றின் பாகுபாடு

"தொல்காப்பியத்தின் முதற்பாகம் எழுத்ததிகாரம் எனப் படும். அதன் முதற்பிரிவு நூன்மரபு, அதாவது தமிழிலக்கண நூல்களின் மரபு எனப்படும். தொல்காப்பியர் முதற் கண் எழுத்ததிகாரத்தையே இயற்றினரென்றும், அதனால் நூல் என்பது எழுத்ததிகாரத்தையே குறிக்குமென்றும், ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றேன். நூன்மரபு தமிழ் ஒலிகளையும் அவற்றின் பாகுபாட்டையும் மெய்ம்மயக்கங்களையும் எடுத்துக் கூறுகின்றது. அவை யாவும் எழுத்தையே குறிக்கின்றன. கண்டுள்ள விளக்கங்களும் இயல்வரையறைகளும் பெரும்பாலும் அக்காலத்து வழக்கிலிருந்த நெடுங்கணக்கொலிகளின் வரிசை முறையைத் தழுவியுள்ளன. அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடியும் முதலெழுத்துக்கள் முப்பது; அவை இயற்கையாக நெடுங் கணக்கு முறையைக் குறிக்கின்றன. மீண்டும் அவர் (நெடுங் கணக்கில்) 'ஔ' வொடு முடியும் பன்னீரொலிகளை உயிர் என்றும், அவற்றிற்குப் பின்வந்து 'ன'வ்வொடு முடியும் பதினெட்டை மெய் என்றும், கூறுகின்றார். அதன்பின் வெவ்வேறொலிகளின் அளபு தொடர்கின்றது. அவ்வடிப்படையில், ஒரு மாத்திரையுள்ள உயிர் குறில் என்றும் இருமாத்திரையுள்ள உயிர் நெடில் என்றும் பாகுபாடு செய்யப்படுகின்றது. மெய்யெழுத்தின் மாத்திரை அரை."

மறுப்பு :

வடமொழியெழுத்துக்கள் மொத்தம் 48 என்றும், 52 என்றும், 53 என்றும், பிறவாறும் இலக்கண நூலாசிரியரிடைக் கருத்து வேறுபாடிருந்து வருவதுபோன்று, தமிழிலும் சார்பெழுத்துப் பற்றிக் கருத்துவேறுபாடு தொன்றுதொட்டு இருந்து வந்திருக் கின்றது.

தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்றென்றார். அது முன்னூல்களைத் தழுவியது. பவணந்தியார் சார்பெழுத்துப் பத்தென்றார். இவ்விருவர்க்கும் இடைப்பட்ட அமிதசாகரனார், "சார்பிற் றோன்றுந் தன்மைய வென்ற" என்று தொகை குறியாது கூறினும், அதன் உரையாசிரியர்,

"அவைதாம்
குற்றியலிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன."

என்னுந் தொல்காப்பிய நூற்பாவை யொட்டிய,

"குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தப் புள்ளி யென்றிவை மூன்றும்
சார்பிற் றோற்றத் துரிமையி னுளவே."

என்றொரு பழநூற்பாவை எடுத்துக்காட்டினார். எனினும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இதுபற்றிக் கருத்துவேறுபாடிருந்திருத்தல் வேண்டும்.

"முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்னும் பனம்பாரனார் பொதுப்பாயிரமும் இக் கருத்திற்கு இடந்தரும்.

இனி, தொல்காப்பியர் காலத்தில் நூல் என்றது பொதுவகைப் பட்ட பொத்தகத்தையன்று; ஏதேனும் ஒருவகை அறிவியலையே. (Science) இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் தனித்தனி இலக்கியம், இலக்கணம் என இருதிறப்படும். அவற்றுள் இலக்கணமெல்லாம் அறிவியல் போன்றிருப்பதால் நூல் எனப்படும். மருத்துவம், கணிதம், கணியம் (வானநூல்) என்பனவும் அவை போன்ற பிறவும் அறிவியல்களே யாதலால், அவையும் நூலெனப்படும்.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
....
யாப்பின் வழிய தென்மனார் புலவர்."

என்னும் தொல்காப்பிய நூற்பாவையும் (செய். 78) அதன் உரையையும் நோக்குக.

இலக்கணம் ஒருமொழிபற்றிய அறிவியலா யிருத்தலால் நூல் எனப்பட்டது. அதனைக் கூறும் பொத்தகமும் நூல் எனவே படும். எ-டு: மதிவாணனுர் நாடகத் தமிழ்நூல்.

ஆகவே, நூன்மரபு என்பது, தமிழிலக்கண நூல்களில் மரபாகக் கொள்ளப்பட்டுவரும் எழுத்துக்களும் அவற்றின் பாகுபாடும் என்று பொருள்படுமேயன்றி, நூன்மரபு ஒன்றே தொல்காப்பியர் முதன்முதல் எழுதிய இலக்கணநூல் என்று பொருள்கொள்ள இடந் தராது.

எழுத்ததிகாரம் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப்புணரியல், எனத் தொண் (ஒன்பான்) பகுதிப்பட்டிருப்பதும், நூன்மரபு என்பது எழுத்ததிகாரம் முழுவதையும் குறிக்கவியலாதென்பதைத் தெற்றெனத் தெரிவிக்கும்,

தமிழ்நெடுங்கணக்கு அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்தினின்று தோன்றியதென்றும், அதையே முதல் தொல்காப்பியர் நூலாக வடித்தார் என்றும், அதற்குப் பிற்பட்ட இலக்கணங்களெல்லாம் அவராலும் இரண்டாம் தொல்காப்பியராலும் பிந்திச் செய்யப்பட்டவையென்றும், இரு தவருன அடிப்படையிலேயே பர். தெ. பொ. மீ. யின் ஆராய்ச்சி இயங்குவதால், முதற்கோணல் முற்றுங்கோணலாயிருப்பதை நெடுகலுங் காணலாம்.

["Then follows......on which basis the classification of long and short vowels are made as having one and two matras respectively, " என்னும் மூலப்பகுதியிலுள்ள நிரனிறைவழு அச்சுப் பிழையாகத் தெரிகின்றது.]

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்".

என்னும் பனம்பாரனுர் பொதுப்பாயிரத்தொடு பர். தெ. பொ. மீ-யின் கொள்கை முற்றும் முரண்படுதல் காண்க.

கூற்று :

புள்ளி "அவர் (தொல்காப்பியர்) சில எழுத்துக்களின் வரி வடிவைக் கூறப்புகுமிடத்துப் புள்ளிக்கொள்கையைப் புகுத்து கின்றார். வேறோரிடத்தில் விளக்கியுள்ளவாறு, அவர் புள்ளியுடைய மெய் யெழுத்துக்களொடு தொடங்கியிருக்க வேண்டுமென்பது விளங்கக்கூடியது. எகர ஒகர உயிர்க்குறில்களும் புள்ளி பெற் றுள்ளன. இது உயிர்மெய் என்னும் அசையெழுத்தைப்பற்றிக் கூற வழிகாட்டுகின்றது. இவற்றிற்கிடையே மிகக் குறுகிய மகர மாகிய மகரக்குறுக்கத்தின் வண்ணனை வருகின்றது. அதன் வரி வடிவம் புள்ளிக்கு அல்லது மெய்யெழுத்திற்கு முன்பே கூறப் படுகின்றது. இன்னொரொழுங்கின்மையும் உள்ளது. நூன்மரபு எழுத்தொலிகளைத் தனித்த வடிவிற் கூறுகின்றது; மொழிமரபு அவற்றின் புணரியல் வேறுபாடுகளைக் கூறுகின்றது. இவ் வேற்பாட்டிற்கு மாறாக, ஒரு புணரியல் வேறுபாடாகிய மகரக் குறுக்கம் நூன்மரபிற் கூறப்பட்டுள்ளது. தெளிவாக, இது ஓர் இடைச்செருகல். மயிலைநாதர் மகரக்குறுக்கத்திற்கு மேற்கோள் வேறு நூல்களினின்று காட்டித் தொல்காப்பியத்தினின்று காட் டாமை, சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. மகரக்குறுக்கம் பற்றிய தொல்காப்பிய நூற்பா பிற்காலத் தொல்காப்பியத்தைச் சேர்ந்ததா யிருக்கலாமா?"

மறுப்பு :

புள்ளியென்பது தொல்காப்பியர் புதிதாக வகுத்ததன்று. உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூவகை யெழுத்தும் முதன்முத லாகக் கொண்ட தமிழ் நெடுங்கணக்கு, வரலாற்றிற்கெட்டாத குமரிநாட்டு வினையி னீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டது. மெய்யெழுத்திற்குக் குறியாகக் கொள்ளப்பட்டது புள்ளி. இது பின்னர் விரிவாக விளக்கப்படும்.

தொல்காப்பியர் நூன்மரபில் எழுத்துக்கட்கு அளவு கூறிவரு மிடத்து,

"மெய்யி னளவே யரையென மொழிப." (11)

என்று மெய்யெழுத்திற்கு அளபு குறித்தபின், சார்பெழுத்து மூன்றும் அவ்வளபே கொள்வதால்,

"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே." (12)

என்று நூற்பாவியற்றி, அரையினுங் குறுகிக் காலாக வொலிக் கும் மகரக் குறுக்கத்தை,

"அரையளவு குறுகல் மகர முடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை." (13)

என்று கூறி, அதன் சிறப்பான வரி வடிவத்தை

"உட்பெறு புள்ளி யுருவா கும்மே." (14)

என்று அறிவித்தார்.

இங்ஙனம், உரிய இடத்திலும் தொடர்ச்சியான முறையிலும் கூறப்பட்டுள்ள புள்ளிச் செய்தியை,

"மெய்யி றெல்லாம் புள்ளியொடு நிலையல்." (15)

என்னும் புள்ளியெழுத்துப் பற்றிய நூற்பாவிற்கு முற்படக்கூறியது, இடவழு என்னும் குற்றமெனக் கொள்வது பொருந்தாது.

'எழுத்தெனப் படுப
....
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே." (1)

"அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன." (2)

என்று நூல் தொடக்கத்திலேயே புள்ளிச் செய்தி கூறப்பட்டிருப்பதால், அதை ஆசிரியன்வாய்க் கேட்டறிந்த மாணவனுக்கு, "உட்பெறு புள்ளி யுருவா கும்மே." என்பது புதியதாகவும் விளங்காததாகவும், முற்படக் கூறல் என்னுங் குற்றத்தின்பாற்பட்டதாகவும், கொள்ளப்படா தென்க.

இனி, தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல், விரித்துக் கூறல், ஒப்பின் முடித்தல், ஒன்றினம் முடித்தல், தன்னின முடித்தல், மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியாத தனையும் முட்டின்றி முடித்தல் முதலிய உத்திகளை நோக்கினும், "உட்பெறு புள்ளி யுருவா கும்மே" என்னும் நூற்பா நூன் மரபில் இடம் பெற்றிருப்பது வழுவாகத் தோன்றுது.

மயிலைநாதர், நன்னூலின் சார்பெழுத்துத் தொகை நூற்பாவிற்கு,

"எழுத்தெனப் படுப......மூன்றலங் கடையே"

என ஆசிரியர் தொல்காப்பியனுரும் இவ்வாறு முதல் சார்பென வகுத்துக்கொண்டா ரென்க. அஃதே, அவர் சார்பெழுத்து மூன்றே கொண்டாராலோ வெனின், அஃதே, நன்று சொன்னுய்! ஒழிந் தவை எப்பாற்படு மென்ருர்க்கு மூன்ருவதோர் பகுதி சொல்ல லாவ தின்மையானும், முதலெழுத்தாந் தன்மை அவற்றிற் கின்மையானும், சார்பிற் ருேன்றுதலானும், இப்பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டு மென்பது. அஃதே அமைக. ஒற்றளபெடையும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் யாண்டுப் பெற்ருமோ வெனின்,

"வன்மையொடு ரஃகான் முஃகா னெழிந்தாங்
கன்மெய் ஆய்தமோ டளபெழும் ஒரோவழி."

"அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ
உளதாம் ஒன்றரை தனிமையு மாகும்"

"பதினெண் மெய்யும் அதுவே மவ்வோ
டாய்தமும் அளபரை தேய்தலும் உரித்தே."

என்ருர் ஆசிரியர் அவிநயனுரும் எனக்கொள்க" என வுரைத் துள்ளார்.

இதில், அவிநய நூற்பாவே போதுமாதலின், தொல்காப்பிய நூற்பா எடுத்துக் கூறப்படவில்லை. அதனுல், தொல்காப்பிய மகரக் குறுக்க நூற்பாவைப்பற்றி நாம் ஐயுற வேண்டியதில்லை. இகரக் குறுக்கம், உகரக் குறுக்கம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் முதலியனவும் தொல்காப்பியத்திற் கூறப்பட் டுள்ளன. ஆயினும், அவற்றையெல்லாம் மயிலைநாதர் மேற் கோளாகக் காட்டவில்லை. அங்ஙனமே மகரக் குறுக்கமும் என்க.

இனி, தொல்காப்பிய மகரக் குறுக்க நூற்பா பிற்காலத்த தாயின்,

"செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் ருகும்." (மொழி. 18)

"னகாரை முன்னர் மகாரங் குறுகும்." (ஷை. 19)

என்பனவும் பிற்காலத்தனவேயாதல் வேண்டும். அங்ஙனம் ஆகாமை காண்க.

கூற்று : ஒலியன்களின் பாதீடு

"பிராதி சாக்கியங்களும் ஒலியன்களின் பாதீட்டை விரித்துக் கூறுகின்றன. நன்னூல் அதை முதலீறிடைநிலை யென்கின்றது. தொல்காப்பியர், எங்ஙனமிருப்பினும், முதலிலும் இறுதியிலும் வரும் ஒலியன்களை மொழி மரபிலும், மெய்ம்மயக்கங்களை நூன் மரபிலும், எடுத்துக் கூறுகின்றார்.........இம் மெய்ம் மயக்கம் தனிச் சொல்லிலும் தொடர்ச் சொல்லிலும் கூட்டுச் சொல்லிலும் நிகழும். எங்ஙன மிருப்பினும், நச்சினார்க்கினியர் தனிச் சொல்லில் வழங்கும் மெய்ம் மயக்கங்களையே எடுத்துக் கூறி, எடுத்துக் காட்டில்லாத மெய்ம்மயக்கங்களெல்லாம் இறந்துபட்டன என்றொரு கொள்கையை மேற்கொள்கின்றார். உண்மையில் நூன் மரபிற் கொவ்வாத சுட்டுவினா அடிகளும் அதிற் கூறப்பட்டுள்ளன."

மறுப்பு :

ஆரிய இனம் தோன்று முன்பே முத்தமிழிலக்கணம் குமரி நாட்டில் முழு வளர்ச்சியடைந்திருந்ததனாலும், முல்லை நாகரிக நிலையினரான ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்த காலத்தில் வட இந்தியாவில் தமிழரும் வதிந்திருந்ததனாலும், இராமாயணக் காலத் திலேயே அகத்தியர் தென்னாடு வந்து "என்றுமுள தென்றமிழ் இயம்பி" மாபிண்டமாகிய அகத்தியம் இயற்றியதனாலும், ஆரிய முதலிலக்கியமாகிய இருக்கு வேதம் இந்தியாவிலேயே இயற்றப் பட்டதனாலும், பல பிராதி சாக்கிய நூற்பாக்கள் தொல்காப்பிய நூற்பாக்களை ஒத்திருப்பதனாலும், பாணினீயத்திற்கு முந்திய முதற் சமற்கிருத இலக்கணமாகிய ஐந்திரம் தமிழகத்திலேயே தோன்றி மறைந்ததனாலும், பிராதி சாக்கியங்கட் கெல்லாம் தமிழிலக்கணமே மூலம் என்பது வெள்ளிடைமலையாம்.

உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்னும் இருவகை மெய்ம்மயக்கங்களுள், பின்னதைப் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களின்படி, பல மெய்ம்மயக்கங்கள் தொகைச் சொல் என்னும் கூட்டுச் சொற்களிலும் தொடர்ச் சொற்களிலுமே நிகழும்.

எ - டு: ள்ச—நீள்சினை, ல்ய—கொல்யானை, ள்ய—வெள் யாறு, ண்ச—வெண்சாந்து, ண்ஞ—வெண்ஞாண், ண்ய—மண் யாறு, ண்வ—எண்வட்டு, ன்ச—புன்செய், ன்ஞ—மென்ஞாண், ன்ய—இன்யாழ், ன்வ—புன்வரகு, ம்வ—வரும்வண்ணக்கன், ய்ச—எய்சிலை, ர்ச—வார்சிலை, ழ்ச—வாழ்சேரி, ய்ஞ—பாய்ஞெகிழி, ர்ஞ—நேர்ஞெகிழி, ழ்ஞ—வாழ்ஞெண்டு, ர்ய—போர்யானை, ழ்ய—வீழ்யானை, ய்ங—வேய்ங்ஙனம், ர்ங—வேர்ங்ஙனம், ழ்ங—வேழ்ங் ஙனம்.

ஞ்ய, ந்ய, ம்ய, வ்ய என்பவற்றிற்கு உரையாசிரியர் காட்டிய உரிஞ்யாது, பொருந் யாது, திரும்யாது, தெவ்யாது என்பவற்றை உரிஞ்யானை, பொருந்யாறு, திரும்யாமை, தெவ்யாடு என மாற்றின், நச்சினர்க்கினியர் கூறும் குற்றம் நீங்கிவிடும்.

"எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய." (எச்ச. 24)

என்று தொல்காப்பியமே கூறுவதால், மெய்ம்மயக்கத்திற்குத் தனிச் சொற் போன்றே கூட்டுச் சொல்லும் கொள்ளப்படும்.

இன்று தனிச்சொல் எடுத்துக்காட்டில்லா மெய்ம் மயக்கங்கள் சிவவற்றிற்கு, முன்காலத்தில் தனிச்சொல்லிருந்து பின்னர் இறந்துபட்டிருக்கலாம். ஆயின், தனிச்சொல்லே எடுத்துக்காட்டிற்குத் தகும் என வரையறுப்பது பொருந்தாது.

ஒரே சொல் அல்லது எழுத்தமைதி வெவ்வேறு வகையில் வெவ்வேறு இயலுக்கு உரியதாகலாம். 'அம்ம' என்னும் விளிப் பெயர் கேட்பிக்கும் இடைச்சொல்லாயின் இடையியலுக்குரியது. கருவி என்னும் தொகுதிப்பெயர் செய்யுள் வழக்குப்பற்றி உரியியலுக்குரியது. இங்ஙனமே சில மெய்ம்மயக்கங்களும் எழுத்தியலுக்கும் புணரியலுக்கும் உரியனவாகும். ஆதலால், "கட்சிருர் கற்சிருர் என்பன இருமொழிப் புணர்ச்சியாகலின் ஈண்டைக்காகா" என்று நச்சினர்க்கினியர் விலக்குவது பொருந்தாது.

இனி, ந்ய, ஞ்ய, ம்ய, ன்ய என்பன போன்ற மெய்ம் மயக்கங்கள் தமிழில் தனிச் சொற்குப் பொருந்தாவாதலின், என்றும் கூட்டுச் சொல்லிலேயே நிகழும். அவற்றைத் தனிச்சொற்கும் உரியனவென்று கூறி, தமிழை வடமொழி வண்ணமாக்கவும் வடமொழிவழியதெனக் காட்டவும் முயல்வர் அகப்பகையும் புறப்பகையுமாகிய தமிழ்ப்பகைவர் சிலர்.

சுட்டெழுத்துக்களும் வினவெழுத்துக்களும் தமிழ்மரபெழுத்துக்களாதலின், அவையும் தொல்காப்பிய நூன்மரபிற் கூறப்பட்டுள்ளன. அசோகன் கல்வெட்டுப் பிராமி யெழுத்தினின்று தமிழ்நெடுங்கணக்குத் தோன்றிற்றென்று மயங்கியோ மயங்காதோ கூறுவதனாலும், இச் சுட்டெழுத்தும் வினவெழுத்தும் வடமொழியிலின்மையால் வடமொழியிலக்கணத்திற் கூறப்படாமையாலும், இவ்விருவகை யெழுத்துக்களும் நூன்மரபிற்குப் பொருந்தாவெனப் பர். தெ. பொ. மீ. கூறுவது அவர் பிறழ்வுணர்ச்சியையே பிறங்கக் காட்டும்.

———

குறள் மணியோசை !

குறள் சப்பானிய மொழிபெயர்ப்பு

[திரு. கிளாரன்சு தனராசு, பி ஏ., பி.டி, காரைக்குடி.]

மூன்று மாதங்களுக்குமுன்பு என் வீட்டிற்கு வந்து ஒரு சில மணித்துளிகள் தங்கியபின் புத்தகயா சென்ற சப்பானியப் புத்தபிட்சு "யோஸ்கந்" தைப்பற்றி ஒருநாள் வெகுவாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். காரணம் அவரிடமிருந்து எத்தகைய மறுமொழியும் வரவில்லை. அவரிடமிருந்து மறுமொழியை எப்படி வரவழைப்பது என்பதே என்னுடைய சிந்தனையாக இருந்தது. இந்நிலையில் குமாரபாளையத்திலிருக்கும் என் இனிய நண்பர் இராசாராமின் நினைவு வந்தது. குமாரபாளையத்தில் இருக்கும் அவருக்கும் சப்பானுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.



திரு. சூசோமஸ்டுனகா

அவர் தம்முடைய சப்பானிய நண்பர் 'சூசோமஸ்டுனகா' என்பவரின் முகவரியை எனக்குக் கொடுத்துதவினர்.

எனது முதல்கடிதம் 26—9—78ஆம் நாளன்று திரு சூசோமஸ்டுனகாவிற்குச் சென்றது; வழக்கமான வாழ்த்துதலுடன் வேண்டுகோளையும் ஏந்திச்சென்றது. புத்தபிட்சுவின் முகவரியையும் இணைத்து அனுப்பியிருந்தேன். சரியாக 15 நாட்கள் கழித்து எனக்கு மறுமொழி வந்தது. மிக்க மகிழ்ச்சியுடன் அஞ்சலைப் பிரித்துப் படித்துப்பார்த்தேன். அப்போதுதான் புத்தபிட்சு ஏன் கடிதம் போடவில்லை என்ற உண்மை புலப்பட்டது. சப்பானியர்கள் பலருக்கு ஆங்கிலம் பேசத்தெரியுமே ஒழிய எழுதவும் படிக்கவும் தெரியாது என்ற உண்மை புலப்பட்டது.

திரு மஸ்டுனகா எப்படியாவது புத்தபிட்சுவினிடமிருந்து பதில் வரவழைத்துத் தருவதாக உறுதி கூறியிருந்தார். எங்களின் பொதுவான கருத்துக்களை நாங்களிருவரும் பல கடிதங்கள்மூலம் பரிமாறிக்கொண்டோம். தொடர்ந்து என் வேண்டுகோளுக்கு


இசைந்து அவர் எழுதிய கடிதத்தில் "நான் ஓர் ஓய்வுபெற்ற இரசாயனப் பொறியியல் வல்லுநன்—ஆனால், இலக்கியத்துறையில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. என்னுடைய இந்த ஓய்வு பெற்ற நிலையில் புத்தகங்களை ஆழ்ந்து படித்துச் சிறு புத்தகங்களை வெளியிட்டு வருகிறேன்' பிறமொழிக் கவிதைகளையும் சப்பானிய மொழியில் மொழிபெயர்த்து வருகிறேன்" என விளக்கி இருந்தார். அந்தக் கடிதத்தைப்பெற்ற நாளிலிருந்து எப்படி இந்தச் சப்பானியப் பொறியியல் வல்லுநரை நம் தமிழ் இலக்கியத்துறைக்கு வரவழைப்பது என்ற எண்ணம் என் மனத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஓரிரு வாரங்கள் கழித்து "உங்கள் நாட்டு நாடோடிப்பாடல்களை எனக்கு அனுப்பிவையுங்கள்—அவற்றை நான் சப்பானிய மொழியில் மொழிபெயர்த்துத் தருகிறேன். ஆங்கிலத்தில் அவைகள் இருக்கவேண்டும்" என்று மஸ்டூனகா வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இது நல்லதொரு வாய்ப்பு என எண்ணிய நான் மீண்டும் அவரிடம் தமிழ்மொழியின் தொன்மையையும் தமிழ் இலக்கியத்தின் சிறப்பையும் கூறி, திருக்குறளைப்பற்றி அவர் எந்த அளவு தெரிந்து வைத்திருக்கிறார் என்பதை அறிய விரிவான வினாக்கள் அடங்கிய கடிதம் ஒன்று எழுதினேன். திருக்குறளைப் பற்றித் தெரிந்துகொள்ள அவர் ஆவல் கொண்டிருந்தார் என்பது அவரது அடுத்த அஞ்சலில் தெரிந்தது. 7—11—78ஆம் நாளன்று திருக்குறளின் மூலம், ஆங்கில உரைகள்—வள்ளுவரின் உருவப் படம் மற்றும் சிறிய தமிழ்நூல்கள் எல்லாவற்றையும் அனுப்பி 'எங்கள் நாட்டுத் தெய்வத்திரு மறையாம் திருக்குறளை நீங்கள் சப்பானியமொழியில் மொழிபெயர்த்துத் தரவேண்டும். அதற்கான தொண்டுகளைச்செய்ய நான் தயார்' என வேண்டினேன். கடிதத்தைப் பெற்ற அவர் சப்பான் நாட்டிலுள்ள சில முக்கியமான பெரிய நூல்நிலையங்களுக்குச் சென்று சப்பானிய மொழியில் திருக்குறள் இதுவரை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதா எனத் தெளிவாகத் தெரிந்துகொண்டு "திருக்குறள் படைப்பு என்னை வியப்பிலஆழ்த்திவிட்டது. நான் திருக்குறளைச் சப்பானிய மொழியில் மொழிபெயர்க்க ஆசைப்படுகிறேன். அதற்குமுன் அதனைப் பருகத்துடிக்கிறேன். எனக்கு வயதாகிவிட்டது. இல்லையென்றால் முறைப்படி தமிழ் கற்றுக் குறளின் சுவையை இன்னும் அதிக அளவில் தமிழிலேயே பருகியிருப்பேன். இருப்பினும் இந்தப் பணியில் நான் என்னை ஒப்படைக்கிறேன்" என மிக உருக்கமாகப் பதில் எழுதியிருந்தார். அதற்கு விடைதருமுகத்தான், "தங்களது ஆங்கிலப்புலமையை முறையாகப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பு செய்யுங்கள்; அல்லது இரண்டு மூன்று ஆண்டுகளில்

தமிழைக் கற்றுக்கொள்ளுங்கள். பின்பு மொழிபெயர்ப்பு செய்ய லாம்'' என வேண்டியிருந்தேன். இதற்கிடையில் அவர் சப்பான் நாட்டிலேயே திருக்குறளைப்பற்றிய உண்மைகளையும் செய்திகளை யும் டோக்கியோ சென்று சேகரிக்க ஆரம்பித்துவிட்டார். தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றில் உண்டான உரைகள் அனைத்தையும் நான் மஸ்டுனகாவிற்கு அனுப்பிவைத்தேன். சில மாதங்கள் கழித் துத் திருக்குறளைத் தாம் மொழிபெயர்க்கப் போவதாக மஸ்டுனகா எனக்கு எழுதியிருந்தார். அத்துடன் தமிழர் நாகரிகம், பண்பாடு, காலம் வாழ்க்கைமுறை ஆகியவற்றை விளக்கும் ஆங்கில நூல் களையும், திருக்குறளுக்கு உண்டான அத்தனை ஆங்கில உரை நூல்களையும் தமக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொண்டார். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு சப்பா னியர் திருக்குறளின் பெருமையை உணர்ந்து அதை மொழி பெயர்க்க முன்வரும்போது அவருக்கு வேண்டும் உதவிகளைச் செய்வது எனது கடமை என உணர்ந்த நான் மதுரையிலுள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகக் கிளைநிலையம் சென்று, இம் மொழி பெயர்ப்புப்பணியைப் பற்றி அதன் மேலாளரிடம் சொன்னேன். விவரங்களைக்கேட்ட மேலாளர் என்னை வர வேற்று வேண்டிய நூல்கள் அளித்து என்னை ஊக்கப்படுத்தினர். அன்றே மஸ்டுனகாவிற்கு அனைத்து நூல்களையும் அனுப்பி வைத்தேன். மேலும் நண்பர் இராசாராமிற்கு மஸ்டுனகாவின் வேண்டுகோள் பற்றிய விவரங்களைக் கூறியிருந்தேன்.

திரு. மஸ்டுனகாவின் இலக்கியப்பணியால் எனக்குப் பல்கலைக்கழக நூல்நிலையங்கள்—பள்ளி நூலகங்கள், பழக்க மாயின. புதிய பல தமிழ்ப் பேராசிரியர்கள் பழக்கம் ஆனார்கள். இடையில் தவிர்க்கமுடியாத சில சூழ்நிலைகளால் 30 நாள்கள் கடிதம் எழுதமுடியாமல் போயிற்று. அதனால் மனம் வருந்திய அவர் "தினமும் நான் குறளுக்காக 12மணி நேரம் செலவிடு கிறேன். தாங்கள் தயவுசெய்து ஒருமணி நேரம் குறளுடன் எனக் காக ஒத்துழைக்கக்கூடாதா? உங்களது இந்தச் செயல் எனக்குச் சோர்வை உண்டுபண்ணுகிறது'' என்று எழுதியிருந்தார். அன்று இரவு தூக்கம் வரவில்லை. விடிவதற்குள் அவர் கேட்ட எல்லா விவரங்களுக்கும் அயராது விடை எழுதி மன்னிப்புக் கடிதத்துடன் மறுநாள் அஞ்சலில் சேர்த்துவிட்டேன். அடுத்த அஞ்சல் எனக்கு ஆறுதலாகவும் பயன்தருவதாகவும் அமைந்தது. முதற் குறளை முறையாக மொழிபெயர்த்து எனக்கு அனுப்பியிருந்தார். அது முதற்கொண்டு ஒவ்வொரு மாதமும் அவர் எத்தனை திருக் குறளை மொழிபெயர்த்திருக்கிறார் என்ற விவரம் உடனுக்குடன் வந்துவிடும். சப்பானியர்கள் கடினமாக உழைப்பவர்கள் என்பதை

நான் புத்தகங்களில் படித்திருந்தேன். மஸ்டுனகாவின் அயராத உழைப்பு எனக்கு அந்த உண்மையை நேரிடையாக விளக்குவது போல் இருந்தது. அது முதற்கொண்டு நானும் மகிழ்வோடு அவர் கேட்கும் பொருள்களுக்கு விளக்கமும், பதிலும் அளித்து வந்தேன். சரியாக 19 மாதங்கள் இப்பணியிலே என்னை ஈடுபடுத்திக்கொண்டேன். 1330குறள்களையும் மொழி பெயர்த்து முடித்தவுடன் அதைத் தெரிவிக்கும் அஞ்சலும் எனக்கு வந்தது. நாட்செல்லச் செல்ல அவருக்குக் குறளின்மீது பற்று அதிகமாகிவிட்டது. பிறகு வெளியிடுவது பற்றிய விவரங்களை முறையாக என்னிடம் கேட்டு அதற்குரிய வழிமுறைகளைத் தாம் செய்யப்போவதாகவும் ‘இன்னும் ஓரிரு மாதங்களில் சொந்தச் செலவிலேயே அச்சிட்டு எனது நண்பர்கள், உறவினர்கள், நூல்நிலையங்கள் ஆகியோருக்கு அன்பளிப்பாக அளிக்கப்போகிறேன்’ என்றும் அவர் எனக்கு எழுதியிருந்தது என்னை மெய்சிலிர்க்க


聖なるクラール
第一巻 美徳
[1] 序文
第一章 神の讃美、
1. すべての文字のはじめにAがあるように、
世界のはじめに永遠の神がある。
2. 純粋無垢の知識をもつ神の御足をあがめないものに、
その学びとった知識が何の役に立とう。

சப்பானிய மொழியில்
பெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள்

வைத்தது. இந்நிலையில் திரு. மஸ்டுனகாவைப் பாராட்டுவது என்து கடமையாயிற்று. அதற்கான வழிமுறைகளைச் சிந்திக்கலானேன். இந்நிலையில் உலகத்தமிழ் மாநாடு மதுரையில் நடைபெறும் எனவும் மொழிபெயர்ப்புகள் பற்றிய விவரங்களைப் பொறுப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. திரு. மஸ்டுனகாவின் பணியை நான் உலகத் தமிழ் மாநாட்டுப் பொறுப்பாளர்களுக்கு முறைப்படி அறிவித்தேன் செய்தி கேட்ட பொறுப்பாளர்கள் மகிழ்வுகொண்டு மேற்கொண்டு விவரம் கேட்டனர். இந்நிலையில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் புத்தகம் ஒன்று வந்து சேர்ந்தது. அதைப் பெற்றுக்கொண்ட

எனக்கு அளவில்லாத மகிழ்வு ஏற்பட்டது. மாநாட்டிற்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்த வேளை, காரைக்குடியிலிருக்கும் குழந்தைக்கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களிடம் சென்று சப்பானியத் திருக்குறள் பற்றி அனைத்துச் செய்திகளையும் முறையாகச் சொன்னேன். அவர்கள் அகமும், முகமும் மலர்ந்து உலகத்தமிழ் மாநாட்டில் சப்பானிய மொழி திருக்குறளை அரங்கேற்ற அனைத்து உதவிகளையும் செய்வதாக உறுதி கூறினர். மேலும் மாநாட்டுப் பொறுப்பாளர்களில் அவரும் ஒருவராக இருப்பதனல் தொடர்புடைய பிற முக்கிய பொறுப்பாளர்களுக்கு என்னை அறிமுகம் செய்துவைத்து அஞ்சல்கள் எழுதித் திரு. மஸ்டுனகாவை உலகத்தமிழ் மாநாட்டுக்கு வரும்படியும் அழைப்பிதழ்கள் அனுப்பும்படியும் வேண்டிக்கொண்டார். இதற்கிடையில் 9—12—79ல் திரு மஸ்டுனகாவைப் பற்றிய செய்தி "தினத்தந்தி" இதழில் வெளியாயிற்று. திரு அழ. வள்ளியப்பா அவர்களின் அறிவுரையின்பேரில் சென்னை சென்று மேன்மைதங்கிய நீதிபதி திருவாளர் மகராசன், உலகத்தமிழ் மாநாட்டுச் செயலாளர் திரு. இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பிலிப்., ஆகியோர்களை நேரில் கண்டு மஸ்டுனகாவின் பணியினையும் அவர் மொழிபெயர்த்த சப்பானிய மொழி திருக்குறளைத் தமிழ்மக்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதுபற்றியும் கூறினேன்.

உலகத்தமிழ் மாநாட்டுச் செயலர் திரு. முத்துக்குமாரசாமி அவர்களும் மொழிபெயர்ப்புப் படியைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். சீரிய முறையில் என்னை உபசரித்து 'உலகத்தமிழ் மாநாட்டில் தமிழுக்காகத் தொண்டு செய்த திரு. ஆசோ மஸ்டுனகாவைப் பாராட்ட அனைத்து வழிமுறைகளும் மேற்கொள்ளப்படும்' என அகமகிழ்வுடன் கூறினர்கள். உலகத்தமிழ் மாநாடு நடைபெறும் மதுரைக்கு வரும்படி திரு. மஸ்டுனகாவிற்கும் அவரது பேராசிரியர் திரு. இனுய் அவர்களுக்கும் முறைப்படி அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் இருவரும் மாநாட்டில் கலந்து கொள்ள வருவதாக விருப்பம் தெரிவித்திருக்கிறர்கள். அந் நாளை என்னுடன் சேர்ந்து நீங்களும் மிக ஆவலுடன் எதிர்பார்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

குறள் சப்பானிய மொழிபெயர்ப்பு உலகத்தமிழ் மாநாட்டையொட்டி, 1981 சனவரித் திங்களில் வெளியிடப்பெறும் உழைப்புக்கும் நுண்ணறிவுக்கும் பெயர்பெற்ற சப்பானியர்களின் மொழியில் குறள் வெளிவருவது தமிழ் அன்னை செய்த தவப்பேருகும்.

———

இறைவன் இயல்பு

[திரு. வி. இலட்சுமி நாராயணன், சென்னை.]

இறைவன் இயல்பு பற்றிப் பண்டைக்கால முதலே நம் முன்னோர்கள், சைவ தத்துவ வாதிகள், நாயன்மார்கள மிகவும் தெளிவாக எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். பலவித உவமைகளைக் கையாண்டு நமக்கு இறைவனது தத்துவத்தைப் புரிய வைக்கவும் முயன்றிருக்கிறார்கள். அவர்கள் துய்த்து அறிந்த உண்மை இறை தத்துவத்தை, நமக்கும் பலவிதப் பாடல்கள், பதிகங்கள் மூலம் தெளிவுபட எழுதி, அருளுடன் விட்டுச் சென்றிருக்கின்றனர். இந் நூல்கள் அருஞ்செல்வமாகக் காப்பாற்றப்பட்டு நம் வழிமுறை யினர்க்குத் தர வேண்டியது நம் தலையாய கடமையாகும். தேவாரம், திருமுறை, திருவாசகம், திருப்புகழ் போன்ற நூல்கள் இறை தத்துவத்தை எளிய முறையில் எல்லா மக்களும் புரிந்துகொள்ளும் படியாக உள்ளன. இந் நூல்கள் இறைவனைத் துதித்து வழிபடும் வழிபாட்டு நூல்களாக இருப்பினும், தத்துவம் நிறைந்த பாடல்கள் ஆங்காங்கே விரவி இருப்பது காணப்படும்.

''விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன், மாமணிச் சோதியான்''

என்று இறைவனை மூன்று வகையான எடுத்துக்காட்டுகளால் விளக்குகிறார் அப்பர் அடிகள். விறகினுள் இருக்கும் தீ, பாலில் இருக்கும் நெய், மணியினில் காணப்படும் ஒளி என்று மூன்று வகைப் பக்குவ நிலையினில் இருக்கும் ஆன்மாக்களுக்கு, அந்த அந்த நிலையில் இறைவனின் இயல்பு குறித்து, மிக அழகாகச் சொல்லப்பட்ட உவமைகள்.

''அறிவொன் றறநின் றறிவார் அறிவில்
பிறிவொன் றறநின் றபிரான் அலையோ''

என்கிறார் 'கந்தரநுபூதி''யில் அருணகிரிநாத அடிகள். அறிவில் அறிவு உருவாக இறைவன் எழுந்தருளுவார் என்பது அடி களின் கோட்பாடு. தம் உடலையே, இறைவன் தன் கோயிலாகக் கொண்டு குடியேறினர் என்று மாணிக்க வாசக அடிகள் உணர்ந்ததாகத் ''திருவாசகத்''தில் காண்கிறோம்.

''புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்து'' —திருவாசகம்.

இவ்வாறு பலவகைகளில் இறைவன் இயல்பைச் சமயகுரவர்களும், அறிஞர்களும் விளக்குகிறார்கள்.

இறை தத்துவத்தை மிகவும் தெளிவாகவும், முழுமையாகவும் விளக்குகிறார் வாகீச முனிவர் தம் "ஞானாமிருதம்" என்ற நூலில்,

"உரை உணர்வு ஒடுங்கினர் உணர்வின்
விரையுறு கடியின் விரவி யோனே"

என இறைவனை, பசுபதியை, விளிக்கின்றார் ஆசிரியர். நான்மறைகளையும் உணர்ந்து, உணர்வு ஒடுங்கின மோனிகளின் உணர்விலே மலரின் மணம்போல் விரிந்துபெருகி இருக்கிறான் இறைவன் என்கிறார்.

'ஞானாமிருதம்' என்னும் நூல் சைவசித்தாந்தக் கருவூலங்களில் ஒன்று. இந்நூல் ஆறாம் நூற்றாண்டிலேயே வாகீச முனிவரால் தமிழ்நாட்டில் சமணர் பெருவாழ்வு வாழ்ந்த சமயம், சைவசித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்காக இயற்றப்பட்டது என்று ஒரு சாரார் கூறுகின்றனர். ("தமிழ் இலக்கிய வரலாறு" பாகம்-2, ஆசிரியர்: கா. சுப்பிரமணிய பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை) ஆயினும் கல்வெட்டுக்கள் ஆராய்ச்சிகளின் வாயிலாக 12ஆம் நூற்றாண்டே, "ஞானாமிருத" நூலின் காலம் என்று தெளிவுபட ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். ("சைவசித்தாந்தத்தில் ஞானாமிருத நூலின் பங்கு" என்ற அடிப்படையில், மதுரை காமராசர் பல்கலைக் கழக, சித்தாந்தத்துறைப் பேராசிரியர் டாக்டர். ச. கங்காதரன் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரை) இந்நூல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள, திருவாலீசுவரம் திருக்கோவிலில், திருவாலீச்சுரமுடையார் சந்நிதியில் சைவத் திருமுறையாகத் தினந்தோறும் ஓதுவதற்கு, நிபந்தங்கள் ஏற்படுத்தியதாகக் கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன.

"உரை உணர்வு ஒடுங்கினர் உணர்வின்" என்ற வாகீச மாமுனியின் வாக்குக்கும்,

"சும்மா இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

என அருணகிரியார் 'கந்தரனுபூதி'யில் சொன்ன அருள்வாக்குக்கும், ஒற்றுமை உள்ளது பெறப்படும்.

சும்மா இருத்தல்—உணர்வு ஒடுங்குதல்
சொல் அற—உரை ஒடுங்குதல்

எனப் பொருள் படலாம். மேலும், இவ்வாறு பூவில் மணம்போல இருக்கும் இறைவன் "அகாரணாற் காரணன்" ஆக நின்ற தன்மையை விவரிக்கிறார் வாகீசர். பத்துத் திக்குகளிலும், பதினான்கு உலகங்களிலும், அளவுகளுக்குட்படாத அண்டங்களிலும், இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் போன்ற காலங்களிலும், அனைத்து ஆன்மாக்களும் போகம் துய்ப்பதற்கு இறைவன் தானே காரணமாய் நின்று அதே சமயம் அத்தகைய ஒன்றிலும் தொடர் பற்றவனாய் இருப்பான். இத்தகைய அனைத்துக்கும் இறைவன் காப்பானாய், அதே சமயம் தானே காக்கும் இறைவன் என்ற ஆணவம் ஒரு சிறிதும் இன்றி இருக்கும் தன்மையும் அழகாகக் கூறப்படுகிறது.

> "இனைய காக்கும் களைகண் ஆகிக்
> களைகண் யானெனும் வினைவு அற வொரீஇ"
>
> —ஞானாமிருதம்

களைகண் = காப்பவன்.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட அனைத்திலும் தான் குறைவின்றி இறைவன் "அகாரணாற் காரணனாய்" நின்ற தன்மை பேசப் படுகிறது. ஆக மூன்று நிலைகளில் இறைவனின் இயல்பு வாகீச முனிவரால் விளக்கப்படுகிறது.

முதலாவது : "இனைய காக்கும் களைகண் ஆகி" (ய) தன்மை

இரண்டாவது : "அன்னோன் அகாரணாற் காரண" னாய் 'நின்ற' தன்மை

மூன்றாவது : "உரையுணர்வு ஒடுங்கினோர் உணர்வின் விரையுறு கடியின் விரவியோ" னாக சூக்குமமாக நின்ற தன்மை.

"அகாரணாற் காரண" நிலைக்குப் பலவித உவமைகளை ஆசிரியர் தம்முடைய "ஞானாமிருத" நூலில் எடுத்துக் கூறி விளக்கம் செய்திருக்கிறார். தண்ணீரில் வாழும் உயிர்கள் தண்ணீரின்றி வாழ முடியாது. ஆயினும் அவ் வுயிர்கள் ஒரு தனித்தன்மை யுடனேயே நீரினில் வாழ்கின்றன. தண்ணீர் அவ் வுயிர்களைச் சார்ந்து இல்லை. ஆயின் உயிர்கள் தண்ணீரையே முக்கியமாய்க் கொண்டு வாழ்ந்தும், அதை அறிவதில்லை. தண்ணீரும் தற்பெருமை கொள்வதில்லை என்று உவமை கூறுகின்றார்.

> "நார மேய பல்லுயிர் அனைத்தும்
> நார மின்றே நாரமின்றி இன்றே
> நாரச் செய்தியு மின்றே" —"ஞானாமிருதம்"

இதேபோல் சூரியனால் ஏற்படுகின்ற மரத்தின் நிழல், அந் நிழலில் இளைப்பாறும் உயிரினங்களுக்கு, சூரியன் காரணமான நிழலைவிட மரமே முதற்காரணமாகத் தோன்றும் தன்மை பேசப்படுகிறது. இவ்வாறாகப் பல உவமைகளால் இறைவனது தத்துவத்தை எடுத்துக் கூறியபின்பு, இறைவனின் பெரு இயல்பை மிகத் தெளிவாகக் கூறும் பாடலின் பகுதி :

"………விரிந்து ஒளிகான்று
மாதிரம் அனைத்தும் ஈரேழ் புடவியும்
அளவு இழைத்து அளவா அண்டமும் பலவெனக்
கொட்புறு காலமும் எப்பேர் உயிரும்
உருவரை யெய்தி ஒன்றொடும் புணரா(து)
இனைய காக்கும் களைகண் ஆகிக்
களைகண் யானெனும் விளைவுஅற வொரீஇப்
பன்னிய எவற்றுந் தன்னதோர் குறையின்றி
யன்றோன் நின்ற அகாரணாற் காரண
என்ன தென்று இசைக்குவம் யாமே யன்றே
உரையுணர்வு ஒடுங்கினர் உணர்வின்
விரையுறு கடியின் விரவி யோனே."

("ஞானமிருதம்"—57)

திரு. இரா. கலியாணசுந்தரம் கழகப் பணியினின்றும் விலகல்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொது மேலாளராகப் பணியாற்றிவந்த திரு. இரா. கலியாணசுந்தரம் அவர்கள் 1—5—1980 முதல் கழகப் பணியிலிருந்து தாமே விலகுதற் கடிதம் கொடுத்து விலகிக் கொண்டனர்.

அடுத்து வரும் கழக மணிவிழா நிகழ்வதையொட்டி அவர்தம் கழகப் பணிக்கும் வெள்ளிவிழாக் காணும்பேறு கிட்டிடும் என எண்ணினோம். ஆனால் அப் பேற்றினைத் திருவருள் கூட்டி வைக்காமல் அவரைத் தடுத்துவிட்டது போலும்.

கழக விழாக்களிலும் தனிப்பட்ட இடங்களிலும் பெருமக்கள் சிலர் 'ஆட்சியாளர் தம் இரண்டு மருமக்கள்மாருக்கு நன்கு பயிற்சி கொடுத்து வைத்திருக்கின்றனர்' என்று அடிக்கடி புகழ்ந்து பேசுவதுண்டு. 'ஐயா அவர்கட்குப் பின்னும் கழகமும் நூலகமும் சிறப்பாக நடக்கும்' என்று கூறுவர்.

ஆனால் அக்கூற்று நிறைவேறாதவகையில், திரு. கலியாணசுந்தரம் தாம் தனியாகப் புத்தக வாணிகம் நடத்துதற்பொருட்டுத் தம் விலகல் கடிதத்தை அளித்துவிட்டனர். கழகச் செயற்குழுவினரும் அதனை ஏற்றுக் கொண்டு அவரைப் பணியினின்றும் விலக ஒப்புக் கொண்டனர் என்பதை இதன்வழி தெரிவித்துக் கொள்கிறேன்.

வ. சு.

இலக்கணக் கோவை—ஒரு மதிப்பீடு*

[பேராசிரியர், டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.]

1. ஆசிரியர் :

தமிழ் இலக்கண நூல்களில் உரைநடை வடிவில் உரையாசிரியர்கள் தந்துள்ள அரிய நுண்ணிய செய்திகள் பலவற்றை அழகிய சூத்திரயாப்பில் தமிழ் உலகிற்கு வழங்கியுள்ள இந்த நூற்றாண்டின் இனிய படைப்பு "இலக்கணக்கோவை"; இதன் ஆசிரியர் காமக்கூர். கா. மு. சுந்தர முதலியார் இலக்கணக் கடலாக விளங்கியவர்; "மாபேராசிரியர்" என்ற பாராட்டைப் பெற்றவர். வடஆர்க்காடு மாவட்டத்தில் தோன்றித் தமிழ்ப் புலமை நடத்திய பெரும் புலவர். அவரது இலக்கணக் கோவை இன்றைய தமிழ் உலகம் அறிந்து உணர்தற்கேற்ற அரிய படைப்பு.

2. படைப்பின் நோக்கம் :

"செந்தமிழ் மணங்கமழப் பெறும் இந் நாட்டின்கண் இலக்கியம் கற்போர்க்குச் சிறந்த கண்ணெனத்தரும் இலக்கண நூல்கள் நூற்றுக் கணக்காகத் தோன்றி விளங்குங்கால், இச் சிறு நூல் ஒன்று செய்தற்குக் காரணம் என்னையெனின், தொல்காப்பியம், இலக்கண விளக்கம், நன்னூல், திருக்குறள் பரிமேழகர் உரை, இலக்கண வினு விடை, பால போதம், இலக்கணத் தெளிவு, இலக்கண மணிமாலை முதலிய நூல்களுள் வசன வடிவமாக ஊன்றி யுணரக்கிடக்கும் அரிய நுண்ணிய விதிகள் கற்போர் மனத்தில் நிலைபெறு வெனவும், செய்யுள் வடிவமாயின் படிக் கவும், உள்ளத்தமைக்கவும் பயன்படும் எனவும் எண்ணி அவ் விதிகளை யெளிய நடையில் சூத்திரங்களாக்கி இலக்கணக்கோவை எனப் பெயர் தந்து வெளியிட்டிருக்கின்றேன்."

என்று எழுதும் ஆசிரியர் முன்னுரை இதன் நோக்கம் இன்னதெனவும், இதன்கண் மேற்கொண்ட பொருள் இன்னதெனவும் இனிது விளக்குகின்றது. (1923)

---

*அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறை நடத்திய "தமிழ் மொழியியல்" பற்றிய கருத்தரங்கில் 16—3—80 அன்று படிக்கப்பட்ட ஆங்கிலக் கட்டுரையின் கருத்துக்களைத் தழுவியது.

3. நூல் அமைப்பு

இந்த நூல் 124 சூத்திரங்களைக் கொண்டு திகழ்கின்றது. ஐந்து சூத்திரங்கள் காப்பு வகையால், விநாயகர், சிவபெருமான், முருகன், பாமகள், அகத்தியர் ஆகியோருக்கு உரியவையாகத் திகழ்கின்றன. ஆசிரியர் சைவ சமயம் சார்ந்தவர் ஆகலின், அச் சமயக் கடவுளர்க்கு வணக்கம் கூறி நூலைத் தொடங்குகின்றார்.

> ''வீசய விநாயகன் விரைமல ரடிபணிந்து
> இசையப் புகலுவன் இலக்கண நூலே''

என்பது முதல் சூத்திரம்.

எழுத்தியல் என்ற பகுதியில் 8, புணரியல் என்ற பகுதியில் 24, பெயரியலில் 24, வினையியலில் 34, பொதுவியலில் 28 என்ற வகையில் நூற்பாக்கள் அமைந்துள்ளன. ஒரு வரியில் அமைந்தனவும், பேரெல்லையாக ஏழு வரிகளில் அமைந்தனவுமாக இவை உள்ளன. நூற்பாக்கள் எளிய நடையில், பொருள் விளங்குவதற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தக்க எடுத்துக் காட்டுக்களும் ஆசிரியரால் உடன் தரப்பட்டுள்ளன.

4. இலக்கணம் என்றால் என்ன ?

இலக்கணம் என்பது என்ன என்று முதற் சூத்திரத்தில் மொழிந்துள்ளார்.

> ''செய்யுள் உயர்ந்தோர் வழக்கமறிந் துணர்ந்து
> எழுதுவ தற்கும் பேசுவ தற்கும்
> ஏற்ற கருவி இலக்கண மாமே.'' (1)

எழுதவும், பேசவும் ஏற்ற கருவி நூலே இலக்கண நூல் என்பது இவர் கருத்து என்பதனை இந் நூற்பா காட்டுகின்றது.

செந்தமிழ் இலக்கணம் உடைய தமிழ் என்றும், இலக்கணத்திற்கு மீறி வழங்குவது கொடுந்தமிழ் என்றும் இவர் வரையறைப் படுத்துகின்றார் :

> ''இலக்கண முடைய செந்தமி ழென்றும்
> மீறி வழங்கும் கொடுந்தமி ழென்றும்
> இருவகை யென்ப பெருநா வலரே.'' (2)

5. எழுத்துக்கள் பற்றி: பொது:

தமிழ் முதலெழுத்துக்களை ஆண், பெண், அலி—என்ற மூவகைப் படுத்தி இவர் மொழிவர். இந்த நூற்றாண்டிலும் இத்தகைய பாகுபாடு இருந்துள்ளது என்றெண்ண வியப்பே உண்டாகின்றது. ஐந்து உயிர்க் குற்றெழுத்துக்கள் ஆண்; ஏழு நெடில் உயிர்கள் பெண்; மெய்யுடன் ஆய்தம் அலி, என்பர் இவர். (3,4,5) வல்லெழுத்தாறும் 'பேரொலி' உடையவை என்றும் (6) மெல்லெழுத்தும் இடையெழுத்தும் ஆகிய பன்னிரண்டும் 'சிற்றொலி' உடையவை என்றும் (7) இவர் கூறுவர்.

எழுத்துக்கள் பிறப்பிற்கு இடம் என்பவை பின்வரும் எட்டெனக் கூறுவர். (8)

> "உரம்கண்டம் மூக்குஇதழ் உச்சி நாப்பல் அணம்
> பேசும் கருவிகள் இவையெட் டாமே."

வல்லெழுத்து ஆறும் 'மூவொலி' உடைய என்றும் (9), மெல் லெழுத்தும் இடையெழுத்தும் 'ஈரொலி' உடைய என்றும் (10) இவ்வாசிரியர் கூறுவது எந்த அடிப்படையில் என்பது தெளிவு படுத்தப்பெறவில்லை. எடுத்தல், படுத்தல், நலிதல் என்ற ஒலிவேறு பாடுகளை இங்குக் குறித்தனரோ என்று எண்ணலாம்.

6. உடம்படுமெய்:

தொல்காப்பியர், "எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே உடம்படு மெய்யின் உருபு கொளல் வரையார்" என்று பொதுப்பட மொழிந்தனர். நன்னூலார் இளம்பூரணரை யொட்டி அவ் வுடம்படு மெய்கள் இன்னவென்றுரைத்தனர். மெய்யீற்றின் முன்னும் சில இடங்களில் உடம்படு மெய்கள் வரல் உண்டு என்று 'இலேசினால்' விதித்தனர் உரையாசிரியர். இலக்கணக் கோவை ஆசிரியர் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்:

> "ஒருகால் சிலமெய் யெழுத்துக் களின்பின்
> உயிர்வரின் உடம்படு மெய்வரல் வழக்கே." (11)

விண் + அத்து　<　விண்வத்து [வ்]
செல் + உழி　<　செல்வுழி [வ்]

இவ் வெடுத்துக் காட்டுக்கள் ஆசிரியரே காட்டியவை. 'ய்'—உடம் படுமெய் மெய்யீற்றுடம்படு மெய்யாக வந்தமைக்கு எடுத்துக் காட்டுக்கள் இல்லை.

7. குற்றியலுகரம் பற்றி :

குற்றியலுகரம் பற்றி இலக்கணக்கோவை கூறும் புதிய கருத்துக்கள் சிந்தித்தற்குரியன.

நாகு+அரிது > நாகரிது

இவ் வெடுத்துக் காட்டினுள், நிலைமொழியீற்றின் உகரமும், வருமொழி முதல் அகரமும் அடங்கி நிற்குமேயன்றிக் குற்றியலுகரம் கெட்டதன்று என்பர். இவ்வாறே வடமொழிச் சொற்களுள் தமிழுள் வந்து வழங்குவனவற்றுள், குற்றியலுகரங்கள் வரும் உயிர் ஏற இடங்கொடுக்கமாட்டா எனவும், அவை முற்றியலுகரங் களாகவே இருக்கும் என்றும் கூறுவர். (12, 13)

சம்பு+ஐ > சம்புவை

இந்து+ஐ > இந்துவை

இவ்வெடுத்துக் காட்டுகள் வடமொழிச் சொற்கள்; இவை வரும் உயிர்க்கு இடம் கொடாமை காணலாம்; பின்வருவது நூற்பா.

"குற்றியலுகரம் வடமொழி யாயின்
முற்றியலுகரமாம்; வருமுயிர்க் கிடங்கொடா." (13)

8. 'படி' வினையெச்சம் :

படி என்னும் ஈற்றை உடைய வினையெச்சங்கள் தமிழில் பிற்காலத்து வழங்கலாயின. இதனை அடுத்து வினைச்சொற்கள் வரும்பொழுது இயல்பு, மிகுதி என்ற இரண்டு நிலைகளைப் பெறும் என்று விதிக்கின்றது இலக்கணக்கோவை. (17)

கொல்லும்படி+சொன்னான்>கொல்லும்படி சொன்னான்

அப்படி+செய்தான்>அப்படிச் செய்தான்

எப்படி+கொடுத்தான்>எப்படிக் கொடுத்தான்

இவற்றுள், முதலில் வினைப்பகுதியைச் சார்ந்து வரும்போது வலி மிகாதும், சுட்டு, வினாவை அடுத்து உறும்போது வலிமிகுந்தும் வந்தது காணலாம். இதனை நுண்ணிதின் கண்டு விதிப்படுத்து கின்றது இந்நூல் :

"படியென் கிளவி வினையை யடுத்துறின்
வலிமிகா; சுட்டு வினாவை யடுத்துறின்
வலிமிகும் என்றே வரைந்தனர் புலவர்."

9. வினைத்தொகை :

வினைத்தொகை பற்றிய பழைய நூற்பாக்கள் அவை இயல்பு முடிவு பெறுவதைக் குறித்துக் கூறவில்லை. ஆனால், இந்நூல் முதன்முதலாக அதனை வரையறுத்துள்ளது.

> "மெய்யையும் உயிரையும் இறுதியா யுள்ள
> வினைத்தொகை முன்வலி யியல்பா கும்மே." (33)

எடுத்துக்காட்டுகள் :

காய்+புலி>காய்புலி
ஓடு+பாம்பு>ஓடுபாம்பு
அடு+கணை>அடுகணை

10. தொழிற்பெயர் :

இலக்கணக்கோவை, பத்து நூற்பாக்களில் தொழிற்பெயர் குறித்துப் பல்வேறு செய்திகளைத் தொகுத்துரைக்கின்றது. இவ்வாறு இந்நூல் உரைக்கும் செய்திகள் பின்வருமாறு :

(1) படர்க்கை இடத்துக்குரியது தொழிற்பெயர்.

(2) இது குறிப்பு, தெரிநிலை என்ற இரண்டு வகைப்படும்.

(3) தொழிற்பெயர் நால்வகைப் பட்டு விளங்கும் :

(அ) முதனிலைத் தொழிற்பெயர்
(ஆ) முதனிலை பெருத தொழிற்பெயர்
(இ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
(ஈ) விகுதி பெற்ற தொழிற்பெயர்

(4) பண்படியாகிய 'மை' விகுதிபெற்ற தொழிற்பெயர்களைக் குறிப்புத் தொழிற்பெயர்கள் என்று கூறலாம்.

(5) எதிர்மறைப் பொருள் உணர்த்தும் தொழிற்பெயர்களும் உள்ளன.

11. ஆகுபெயர் அன்மொழித்தொகை—இரண்டும் ஒன்றே :

இந்நூல் ஆகுபெயரையும், அன்மொழித்தொகையையும் ஒன்றென்ற முடிவை உடையது. சேனாவரையர், சிவஞான முனிவர் முதலிய பழைய இலக்கண நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் கொண்டிருந்த கருத்துவேறுபாட்டுக் கோட்பாட்

டிற்கு இவ்வாறு இலக்கணக்கோவை முற்றுப்புள்ளி வைத்துள்ளது. பெயர்ப்பகுப்பு வகையில் நோக்கும்போது ஆகுபெயராகக் கருதப் படும். அவையே, தொகைப்பகுப்பு நோக்கில் அன்மொழித்தொகை என்று கருதப்படும்; ஆதலின் இரண்டும் ஒன்றே என்கின்றனர் இவ்வாசிரியர்; இம் முடிவு நன்கு நோக்கினுல் ஏற்றுக்கொள்ளத் தக்கதே எனலாம்:

"சேனு வரையர் முதலிய சிரியோர்
பெயரின் பகுப்பால் ஆகுபெயர் எனவும்,
தொகையின் பகுப்பால் அன்மொழி எனவும்,
சொல்லல் குறையறு நெறியென்று ஓர்ந்துஅப்
பெயரும் தொகையும் ஒன்றெனல் முறையே
வெவ்வே றெனல்அதி வியாத்திக் கிடமே." (46)

12. அடுக்கு, இரட்டைக்கிளவி வேறுபாவை :

விலங்கிரட்டை மக்களிரட்டை போன்று வேறுபாடுற்று தனித் தனிப் பொருளைத் தருவது அடுக்கு எனவும் (49) பூவிரட்டை, இலையிரட்டை போன்று ஒன்ருகி ஒருபொருளைத் தருவது, இரண் டுக்கு மேற்போகாத கிளவி இரட்டைக்கிளவி (50) எனவும் இந்நூல் விளக்கியுள்ளது.

13. ஆரும்வேற்றுமை உருபு :

உடைய என்னும் ஆரும் வேற்றுமை உருபு, பேச்சு வழக்கில் 'இட' என்று மருவி வழங்குவதை இவ்வாசிரியர் ஒத்துக்கொண்டு நூற்பாவில் அதனை விதிப்படுத்துகின்ருர்.

"உடைய என்னும் ஆற னுருபு
இடஎன மருவி இயலு மென்ப." (55)

எ-டு: நம்முடைய பணம் > நம்மிடபணம்

14. புதிய மரூஉ முடிபு :

பிராமணர் பேச்சு வழக்கில், நேக்கு (எனக்கு), நோக்கு (நினக்கு) என வழங்கும் மரூஉ முடிபுகளை இலக்கண மரூஉ வாக ஆசிரியர் கருதி நூற்பாவில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"எனக்கு நினக்கெனும் இருமொழி வழக்கில்
நேக்கு நோக்கென நிலைபெறு மென்ப" (56)

பேச்சு வழக்கையும், வட்டார வழக்கையும், இலக்கணம் மறுத்தொதுக்க இயலாது என்ற நிலையை இவற்ருல் அறியலாம்.

(தொடரும்)

தமிழ்ச் சிதைப்பு வெறியர்கள்

[புலவர் பொன். முனியப்பன், கூவனூர்.]

உலகில் ஒவ்வொரு மொழிக்கும் உரிய எழுத்துக்கள் உள்ளன. அந்தந்த மொழிக்கு உரிய எழுத்துக்களைக் கொண்டு அவ்வம் மொழியை வழங்கினால்தான் அது வீழாது வாழும். உலகிலேயே பிறமொழி எழுத்துக்களைக் (சொற்களை அல்ல) கலந்து, வலிந்து எழுதப்படுகின்ற சிதைப்புச் செயல் தமிழில்தான் நடைபெற்றுவருகிறது. மொழியறிவில்லாத சிலராலும், பழக்க அடிமைத்தனங் கொண்ட சிலராலும், தமிழ்ப்பகைகொண்ட சிலராலும் இம் மொழிக்கேடு இடைவிடாது செய்யப்பட்டு வருகிறது.

இச் செயல் தேவையின் பொருட்டோ, மொழிநலத்தின் பொருட்டோ செய்யப்படுவதில்லை. சமற்கிருதத்தைவிடத் தமிழ் உயர்ந்ததில்லை என்பதை (என்னும் தம் உள்ளழுக்கை) எடுத்துக் காட்டவும், சமற்கிருதத்தின் துணை தமிழுக்கு மிக இன்றியமையாதது என்பதை (என்னும் தம் ஏமாற்று இழிபண்பை) வெளிக் காட்டவும் இவ்வழும்பினைச் சிறிதும் தழும்பாமல் செய்து வருகின்றனர்.

பல்வேறு வெளியீட்டுக் கருவிகளும், இதழ்களும், விளம்பரங்களும், பிறவும் தம் ஆளுகையின் கீழ் இருப்பதால் மேற்குறித்த அடாவடித்தனத்தை விடாது செய்து தமிழைச் சிதைக்கும் தனிப் பெரு வெறியர்களாய்த் திகழ்கின்றனர்.

சமற்கிருத மொழியில் பற்றுக்கொண்டு அதன் நலத்திற்கும் வளத்திற்கும் பணி செய்வது வரவேற்கத்தக்கதே. ஆயின் அம் மொழியின்மீது கொண்ட பற்றால் அதனைப் பிறமொழியின் மீது திணிப்பதும், கலப்பதுமான செயல்களைச் செய்பவர்களை அவர் விரும்பும் மொழிப்பற்றினர் என்று சொல்வது ஏற்புடையதன்று.

இவர்கள் தம் பற்று மொழியைத் தாம் பற்று மொழியில் புகுத்துவதால் வேண்டாத வினைபுரிகின்றனர். இத்தகையோரை அவர் விரும்பு மொழிப்பற்றுடையர் எனக் கூறல் பொருத்தமன்று. இவரை மொழிச் சிதைப்பு வெறியர் என மொழிவதே முறைமையாகும்.

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 54, பரல்7 இல் சேதுராமன் என்பவரைப்பற்றித் 'திகடசக்கரம்' என்னும் கட்டுரையிலும் 'அருட் கவியாரின் வடமொழிப்பற்று' என்னும் குறிப்புரையிலும் சில செய்திகள் கொடுக்கப்பட்டிருந்தன.

அவர் வடமொழிப் பற்றினராய் வாழ்வாங்கு வாழட்டும்! ஆயின், அவ் வடமொழிப் பற்றைத் தமிழில் திணித்து, தமிழைச் சிதைத்துத் தமிழையும் வடமொழியாக்கக் கெடுநிலைபுரியும் கேடர்களுக்கு உரிய அரிய பெயர் வெறியர் என்பதே. வெறியின் இயல்பு எத்தன்மைத்து என்பதை எண்ணிப் பார்ப்போர்க்கு இக் கூற்றின் மெய்ம்மை புலப்படும். எனவே, சேதுராமன் போன்ருேர் புரியும் செயல் தமிழ்ச்சிதைப்பு வெறிச்செயலேயன்றி, வடமொழிப் பற்றுப் பணியன்று.

இவர்க்கும், இவரொத்த ஏனையோர்க்கும் இறுதியாக ஒன்று உரைத்தல் சாலும். தனக்கென எழுத்தில்லாத, என்றுமே பேச்சு வழக்கில் வழங்காத, முற்றிலும் செயற்கை மொழியான சமற்கிருதம் ஆரியர் பேசிவந்த வேதமொழியில் ஒருபங்கும், வடதமிழ் எனப்படும் பிராகிருதத்தில் இருபங்கும், தமிழில் இருபங்கும் பெற்று இலக்கிய மொழியாய் இலங்கி வருகிறது.

தமிழின் துணையால்தான் சமற்கிருதம் சால்புற்றுத்திகழ்கிறது என்னும் அரிய சான்றுகள் நிறைந்த உண்மையை, இது நாள்வரை மிகத்திறமையாக மறைக்கப்பட்டு வந்த உண்மையை, திண்மையுற உணர்த்தும், தேர்ந்து—ஆய்ந்து—அமைத்த தெளிவு நூல் ஒளிவுமறைவின்றி உலகிற்கு விரைவில் உணர்த்தும். இன்று போல் அன்று எவரும் ஏமாற்ற இடமில்லை என்பதைத் திடமுற உள்ளத்தில் இருத்திக் கொள்க!

இருபெரும் பிரிவில் நின்ருற் போதும்

தமிழ்நாட்டிலுள்ள மக்கள் ஊன் தின்பவரும் ஊன் தின்னுத சைவரும் என்னும் இருபெரும் பிரிவில் நின்ருற் போதும். சைவரிலேயே பல வகுப்புகளும், அங்ஙனமே ஊன் தின்பவர்களிற் பலப் பல வகுப்புகளும் இருத்தல், பொருளற்ற வேற்றுமையாய் ஓயாத சாதிச் சண்டைகளை உண்டாக்குவதாய் இருக்கின்றது. பொருளற்ற இவ் வேறுபாடுகளை முற்றும் ஒழிப்பதற்கு எல்லாரும் முயற்சி செய்தல் வேண்டும்.

மறைமலையடிகள்

(மறைமலையடிகள் அறிவுரைக் கோவை, பக். 201)

சாரியை—அக்கு

[மயிலம், ஆ. சிவலிங்கனர்,

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-20]

ஆசிரியர் தொல்காப்பியர் சாரியைகளாக இன், வற்று முதலிய வற்றைக் கூறியுள்ளார்,

''இன்னே வற்றே அத்தே யம்மே
ஒன்னே யானே யக்கே யிக்கே
அன்னென் கிளவி யுளப்படப் பிறவும்
அன்ன வென்ப சாரியை மொழியே'' (119)

என்பது அவர் நூற்பா. இச் சாரியைகள் உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் ஆகியவற்றின் பின்னுக வரும். இச் சாரியைகள் தொடர் மொழிகளில் பெயர்ப்பின் வரும்போது, ஒவ்வொன்றும் எவ்வெவ்வாறு (திரிந்தும், திரியாமலும்) வரும் என்றும் ஆசிரியர் கூறியுள்ளார்.

இவற்றுள் 'அக்கு' என்ற சாரியை பற்றி

''எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்ருது'' (128)

என்று கூறினுர். 'இன்' என்ற சாரியையின் 'ன'கர ஒற்று இன்ன விடத்து 'ற'கர ஒற்ருகும் என்றது போலவே, ஒவ்வொரு சாரி யைக்கும் திரிபுகள் கூறியுள்ளார். என்ருலும், இச் சாரியைகள் திரிபு இல்லாமலும் வருதல் உண்டு. ஆனுல் 'அக்கு' என்ற சாரியை மட்டும் எந்த இடத்திலும் அகரம் மட்டும் நிற்க, மற்றைய எழுத்துக்கள் கெடும் என்ருர்.

தாழ் என்ற சொல், கோல் என்ற சொல்லோடு சேரும்போது, அக்குச் சாரியை வரும் என்பார்,

''தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும்'' (384)

என்று விதி கூறினுர். அவ்வாறே தமிழ் என்ற சொல்லும் வருமொழியுடன் சேரும்போது 'அக்கு'ப் பெறும் என்ருர்.

''தமிழென் கிளவியும் அதனே ரற்றே'' (385)

என்பது அவர் கூற்று. 'தாழ்' என்பது 'கோல்' என்பதுடன் சேரும்போது அக்குச் சாரியை பெற்று 'தாழக்குக் கோல்' என நின்று, பின்னர் 'அக்கு' என்பதன் அகரம் நிற்க, மற்றைய எழுத்துகள் கெட்டுத் தாழக் கோல் எனச் சேரும். இப்படியே தமிழ் அரசர் என்பன சேரும்போது அக்குப் பெற்று, அக்கின் அகரம் மட்டும் நிற்க மற்றைய எழுத்துக்கள் கெட்டுத் தமிழவரசர் எனச் சேரும்.

எந்த ஓரிடத்தும் 'அக்கு'ச்சாரியை முழுமையாக நிற்பதில்லை. அதனால் ஆசிரியர் "எப்பெயர் முன்னரும்......முற்றத் தோன்றாது" என்றார்.

'அக்கு' என்பதில் 'அ' என்ற எழுத்தே பயன்படுவதாயின் 'அ' என்பதே சாரியை யென்று கூறிவிடலாமே. (நன்னூலார் 'அ' என்பதே சாரியை யென்றார்) அவ்வாறு கூறாமல், 'இன்னே வற்றே" என்ற நூற்பாவில் 'அக்கு' என்பதையே சாரியையாகக் கூறி, "எப்பெயர் முன்னரும்" என்ற நூற்பாவினால் அகரம் நிற்க மற்றைய எழுத்துக்கள் கெடும் என்று கூறுவானேன்?

தொல்காப்பியர் தாம் இயற்றும்நூல், 'வழிநூல்' என்பதைத் தெரிவிக்கவே அவ்வாறு கூறினார் என்னலாம்.

தொல்காப்பியர்க்கு முந்து நூலார்கள், அக்குச் சாரியையே கூறினார்கள். அவர்கள் காலத்தில், 'தாழக்குக்கோல்' என்பது போன்றே வழங்கியிருக்கலாம். அக்குச் சாரியையில் யாதொரு மாறுபாடும் இருந்திருக்காது. காலப்போக்கில் தொல்காப்பியர் காலத்தில் 'தாழக்கோல்' என்ற அளவிலேயே வழங்கியதாகலாம். 'அக்கு' எந்த இடத்திலும் முழுமையாக அமையச் சொற்றொடர் வழக்கில்லாதிருந்திருக்கலாம். அதனால் ஆசிரியர், தம்முன்னோர் கருத்தாக 'அக்கு' என்ற சாரியை கூறிப் பின், தம் காலத்துக் கேற்ற நிலையில் தாம் சேர்க்க வேண்டிய கருத்தாக 'அக்கின் அகரம் நிற்க மற்றைய எழுத்துக்கள் கெடும்' என்றார் எனக் கொள்ளலாம்.

இவ்வாறு அமைதி கொள்ளாக்கால் எங்கும் பயன்படாத 'அக்கு' என்ற சாரியையினைக் கூறியதால் பயன் என்னை என்பதற்கு விடையில்லாது போதலுடன், வேண்டாததைக் கூறியதாக ஆசிரியர்பால் குற்றம் தங்கலுமாம். எனவே, வழிநூலாசிரியரான தொல்காப்பியர், தம் நூல், 'வழிநூல்' என்பதை இதன் மூலம் தெரிவித்தார் என்னலாம்.

———

சங்க நூல்களில் சிள்வீடு

(Cicadas in Sangam Literature)

[திரு. பி. எல். சாமி, ஐ. ஏ. எசு.]

(முன் இதழ் ௨௩-௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கப் புலவர்களும் பிற்காலத்துப் புலவர்களும் சிள்வண்டைப் பாலைத்திணையிலேயும் முல்லைத்திணையிலேயும் காட்டு மரங்களில் வாழ்வதாகக் கூறியுள்ளது இயற்கையான அறிவியல் செய்தியாகும். சிள்வீடு ஓமை மரத்தில் 'ஒல்குநிலை ஒடுங்கி' ஓசையிட்டதாகவும் உன்னமரத்தின் கவட்டில் பொருந்தி ஓசையிட்டதாகவும் வேலமரத்தின் அடிமரத்தில் பொருந்தி ஓசையிட்டதாகவும் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். கம்பராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் 'சில்லிகை' என்ற பெயர் வருகின்றது. இந்தப் பெயருக்குச் சிலர் 'மரங்குடையுந் தும்பி' என்று பொருள் கூறினர். சிலர் தேர்ச்சக்கரம் என்று பொருள் கூறினர். இருப்பினும் சில்லிகை என்ற சொற்கு மரங்குடையும் தும்பி என்ற பொருளும் இருந்தது தெரிகின்றது. மரத்தின் கிளையிலும் கொம்பிலும் பொருந்திக் குடைந்து சாற்றை உறிஞ்சி வாழும் பூச்சி சிள்வீடு என்று அறிவியலார் கூறுவர். (Adult cicadas feed on the sap of plant stems and succullent shoots. They have piercing and sucking mouth parts to feed on sap.)

இந்தப் பூச்சியின் சங்ககாலப் பெயரையும் இடைக்காலப் பெயரையும் ஆராய்ந்தால் இப் பெயர்கள் எல்லாம் இந்தப் பூச்சி வெளியிடும் தனித்தன்மை மிக்க ஓசையின் காரணமாகத் தோன்றியது என்பது நன்கு புலப்படுகின்றது. விட்டுவிட்டு 'சிள்' என்று ஓசையிட்ட காரணத்தால் சங்க நூல்களில் 'சிள்வீடு' என்றழைக்கப்பட்டது. பதிற்றுப்பத்தில் வழங்கும் சிதடி என்ற பெயரும் மற்றும் சிதடும், பதடும் என்ற பெயர்களும் உள்ளீடற்ற தன்மையைக் குறிக்கும். 'சிதட்டுக்காய் எண்ணின்' என்று வரும் குறுந்தொகைப் பாடல் வரியில் (261) உள்ளீடற்ற தன்மை குறிக்கப்பட்டுள்ளது. சிள்வண்டின் உடல் சிறியதாக இருப்பினும் அது செய்யும் ஓசை மிகப் பெரியது. சங்ககால நூல்களில் பதிற்றுப்பத்தில் மட்டுமே சிதடி என்ற பெயர் சிள்வண்டுக்கு வழங்கியிருப்பதால் இப் பெயர் சேர நாட்டு வழக்காக இருக்கலாம். மலையாளத்தில் இந்தப் பூச்சியைச் 'சிமிலி' என்றழைப்பதைக் கேட்டிருக்கிறேன். பிங்கலந்தை நிகண்டில் 'சில்லை, நெடி, சில்லிகை, சிமிலி' என்ற பெயர்கள் சிள்வீட்டின் பெயர்களாக வழங்கியுள்ளன. பிங்கலந்தைக்கும் முந்திய சேந்தன் திவாகர நிகண்டில் சிள்வீட்டின்

பெயராகச் 'சில்லே, நெடி, சில்லிகை, சிமிலி' என்ற பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் இந்தப் பூச்சி 'சிள்' என்று ஓசையிடுவதாகக் கருதிச் 'சிள்வீடு' என்றழைத்தனர். 'சில் என்று ஒல் அரூது' ஒலிப்பதாகக் கருதி இப் பூச்சியைச் 'சில்லி' என்றழைத்தனர். சில்லி என்பதே சில்லேயாகவும், சில்லிகையாகவும் மாறிற்று. இது போன்றே 'சில்' (சிள்) என்று விட்டு விட்டு ஓசையிடும் ஒருவகை வாத்து போன்ற பறவையைச் 'சில்லி' என்று மணிமேகலே (4-29) அழைத்துள்ளது. இதை 'Whistling teal' என்று ஆங்கிலத்தில் அழைப்பர். 'விசில்' போல் விட்டு விட்டு ஒலிப்பதால் இந்த ஆங்கிலப் பெயர் தோன்றியது. புதுவையில் நாட்டார் மக்கள் 'விசில்' என்ற ஆங்கிலச் சொல்லே அதன் போலியான 'சிவில்' என்று தமிழ் மரபில் வழங்குவது வியப்புக்குரியது. சிவில் அடிக்கிருன் என்பர். சிவிறிக்கு விசிறி இன்றும் போலியாக வழங்குவதைக் காணலாம். ஆங்கிலத்தில் வழங்கும் 'சிம்னி' (chimney) என்ற பெயர் இக் காலத்தில் 'சிமினி' என்று தமிழ்ப் போலிப் பெயராக வழங்குவதையும் கவனிக்க வேண்டும். இத்தகைய வழக்குகளே மொழி நூலார் (Linguists) ஆராயாதது ஒரு குறையே. சிமிலி என்று மலேயாளத்திலும் தமிழிலும் வழங்கும் பெயர் 'சிமிழ்' என்ற சொல்லின் அடிப்படையாகத் தோன்றியதாகும். சிமிழ்த்தல் என்ற சொல் விட்டு விட்டுப் பார்த்தல், ஒலித்தல் என்ற பொருளுடையதாகும். சென்னேப் பல்கலேக்கழக அகராதியில் சிள்வண்டுக்குப் பெயராகச் 'சில்லூறு' என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. இந்தப் பெயர் நாட்டார் மக்களின் வழக்காகத் தெரிகின்றது. வல்லூறு என்ற வழக்குப் பெயர் இராசாளி போன்ற பறவைகளேக் கொன்று வாழும் ஒரு தனிப்பட்ட பறவைக்குப் பெயராக வழங்குவதைக் காணலாம். அதையே 'புள்ளூறு' என்று புள் என்னும் பறவைகளுக்கு ஊறு என்ற பொருளில் அழைப்பர். சிள்வண்டு ஓயாது ஓசையிட்டுச் சிறிய ஊறு செய்வதால், சில்லிய ஊறு செய்வதால் 'சில்லூறு' என்றழைக்கப்பட்டது. நெடி என்ற பெயர் இந்தப் பூச்சியின் பெயராக நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. சிள்வண்டின் ஓசை நெடுந்தொலேவு கேட்பதால் நெடி என்ற பெயர் தோன்றியிருக்க வேண்டும். இந்தப் பெயர் வழங்கியதற்கான இலக்கியச் சான்று நிகண்டாசிரியர்கள் எழுதின காலத்தில் இருந்திருக்க வேண்டும். சேந்தன் திவாகரம், பிங்கலந்தை ஆகிய நிகண்டுகளில் நெடி என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. ஆனுல், பிற்காலத்திய நிகண்டான சூளாமணியில் 'நெடி' என்ற பெயர் காணப்படவில்லே. இக்காலத்துப் பேச்சு வழக்கில் நெடி வீசுகிறது என்று கூறுங்கால் நெடி என்ற சொல் கெடுநாற்றம் வீசுவதையே குறிக்கின்றது.

அறிவியலார் இந்த வியப்புக்குரிய பூச்சியை ஆராய்ந்துள்ளனர். இப் பூச்சி விடும் ஓசை ஒரு நொடிக்கு 100லிருந்து 150 வரை அதிர்வு எண் அலைகளைக் கொண்டது என்று கணக்கிட்டுள்ளனர். ஆண்பூச்சியே ஓசையிடுகின்றது. பெண்பூச்சியை இணைவிழைச்சுக்காக (Mating) அழைப்பதற்காக இவ்வாறு ஓசையிடுகின்றது. பெண் பூச்சிக்கு ஓசையைக் கேட்கும் தன்மையிருப்பினும் பெண்பூச்சி பேசாமடந்தையாகும். ஆண் சிள்வண்டின் வாழ்க்கை மகிழ்ச்சி மிக்கதாகும். ஏனென்றால் இந்தப் பூச்சி வகையில் பெண்ணுக்குக் குரலில்லை என்று நகைச்சுவையாகக் கூறுவர். 'Happy the cicadas lives, they have voiceless Wives' என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. ஏனென்றால் ஒரு கணவனுக்கு எதிர்த்துத் திருப்பிப் பேசாத மனைவி அமைவது பெரும் பேறு அன்றோ! இந்தச் சிள்வண்டின் உரத்த ஓசையைப்பற்றியும் மகிழ்வான வாழ்க்கையைப் பற்றியும் வெளிநாட்டுக் கவிஞர்கள் பாடியுள்ளனர். சிள்வண்டின் வாழ்க்கை வரலாறும் வியப்புக்குரியதாகும். முட்டைவிட்டுப் பொரித்த இதன் பூச்சி உருவமும் பருவமும் அடையாத நிலைமையில் (pupal) மரங்களின் வேர்களில் பொருந்திச்சாற்றை உறிஞ்சிவாழும். பதினான்கிலிருந்து பதினேழு ஆண்டுகள் நிலத்தடியில் வேர்களில் வாழ்ந்து அதன் பின்னரே இறக்கைகளுடன் கூடிய முழுப்பூச்சியாக மாறுகின்றது. இவ்வளவு ஆண்டுகள் முழுப் பருவமடையாது வாழும் ஒரு பூச்சியைப் பூச்சியுலகில் காண்பதரிதாகும்.

சிள்வண்டுகள் உலகில் பல நாடுகளில் காணப்படுகின்றன. இந்தப் பூச்சி வெளியிடும் உரத்த ஓசையைக் குறித்து ஆங்கிலத்திலும் பெயர்கள் வழங்குகின்றன. இதன் ஓசையை ஆங்கிலத்தில் Knife grinder, scissor grinder, Railway whistle என்ற பெயர்களால் அழைத்தனர். அரைத்ததை அரைக்கும் என்ற பொருளிலும் சாணைபிடிக்கும் ஓசையிடும் என்ற பொருளிலும் புகைவண்டி விசில் என்ற பொருளிலும் பெயரிட்டு அழைத்ததைக் காணலாம். விசில் என்ற ஆங்கிலச் சொல்லைச் 'சிவில்' ஆக மாற்றி வழங்கினதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். இக்காலத்தில் நாட்டார் மக்கள் இந்தப் பூச்சியைச் 'சுவர்க்கோழி' என்றழைக்கின்றனர். கோழி விட்டு விட்டு ஓசையிடுவதால் 'சுவர்க்கோழி' என்று நாட்டார் மக்கள் அழைத்தனர். இந்தியாவில் காணப்படும் சிள்வண்டை Lemuriana apicalis என்று அறிவியலில் அழைப்பர்.

———

சாங்கியமும் சைவமும்

[வித்துவான், நெல்லை. க. சுப்பிரமணியன் எம்.ஏ., பி.டி.,

தூயயோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.]

(மலர் - அ, ௪0அ ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வன் இன்றியமையாமை குறித்துச் சைவம்:

புருடன் அநாதியே அமலனானால் பிரகிருதியால் மறைக்கப் பட்டுப் பெத்தனாகான். அன்றியும், அம் மறைப்பு நீங்கி முத்தன் ஆனாலும் முன்புபோல் மீளவும் பெத்தனாவான். ஆகவே, இவற்றைக் கூட்டுதற்கு ஒரு முதல்வன் வேண்டும் என்பதனை அருணந்திசிவம்,

சுத்தன் அறிவன் புருடனெனிற்
சூழா தாகும் பிரகிருதி;
பெத்த நீங்கி முத்தனானாலும்பின்
பெத்த னாவான்; பேரறிவாற்
கத்த மேவும் பிரகிருதி
கண்டு கழிக்க மாட்டானேல்
முத்த னாகான்; சுத்தனுக்கு
மூலப் பிரகிருதியில்லையாம்.[7]

என்று தெருட்டியுள்ளார். கத்தம்—பொல்லாங்கு.

அந்தகன் முதுகில் முடவன்:

புருடன் பிரகிருதிபெற்றால்
போதம் சிறிதங் குண்டாகிக்
குருடன் முதுகில் முடவனிருந்
தூர்ந்தாற் போலப் பிரகிருதி
இருட விடத்தே இருந்தியங்கும்
என்மால் இறையன் திரண்டினையும்
மருட அருவாய்ச் சேட்டிப்பித்
தறியும் அமலன் அரனேயாம்.[8]

7. சிவஞான சித்தியார், 261.
8. Ibid., 262.

புருடன் பிரகிருதியோடு பொருந்தினல், சிறிது அறியாமை ஏற்படும். அந்தகன் முதுகில் முடவன் அமர்ந்து அவனை நடத்தினற்போல், கன்மத்துக்கு ஈடான பிரகிருதியினல் சிறிது அஞ்ஞானம் எய்திய புருடனைப் பிரகிருதி கூடி அவனிடத்தே இருந்து கன்மத்துக்கு ஈடான தொழிலை நடாத்தும்.[9] ஆகவே, பிரகிருதியுடன் பிணிப்புற்றவன் புருடனே; கருத்தா அல்லன். அந்தப் புருடனையும் அவனைச் சேர்ந்த பிரகிருதியையும் கூட்டி அஞ்ஞானமே தனக்கு உருவமாகக் கொண்டு இயங்குமாறு இயக்கி, ஆன்மாக்கள் செய்த கன்மத்தையும் அறிந்து அதற்குத்தக்க பயனையும் கொடுப்பவன் மலரகிதனுகிய இறைவனே.

பிரகிருதிக்கு அஞ்ஞானமே உருவமாகையால் அதனைப் பொருந்தி நின்ற புருடனும் மருடன் எனப்பட்டான். குருடன் முதுகில் முடவன் இருந்து இயக்குவதுபோல் பிரகிருதி யாகிய இருள்(தன்) இடத்தே புருடன் இருந்து கன்மத்தால் இயக்கும். அதற்கு வேறு இறைவன் வேண்டா எனில், அப் பிரகிருதி புருடன் என்ற இரண்டினையும் அருள் (தன்) உருவாய் இன்று அமலனுய இறைவன் தொழிற்படுத்தி அறிந்துகொள் வான் என்றுணர்க.

கன்மத்தால் என்பது கன்மால் என நின்றது, குறைக்கும் வழிக் குறைத்தல்.

பிணி நீங்க வேண்டின் பணி செய்வராக:

அறியான் புருடன்; பிரகிருதி
அசேதனம்; காரியத்தினுக்குக்
குறியாய் நாதன் உளனென்று;
கூறு முத்தி விவேகமெனில்
செறிவாம் தனைபோ காதறியில்
சேர்த்தோன் வேண்டும்; செயலிற்போம்
நெறியால் பணிசெய் துடற்பாசம்
நீக்கிக் கொள்ளீ ரின்மலனுல்.[10]

புருடன் தானே அறியமாட்டான். பிரகிருதியோ சடம். இவ் விரண் டினையும் இயைத்து இயக்குவதற்கு நிமித்த காரணன் ஒருவன் உளன். பந்தம் நமக்கு உள்ளது என்று அறியும் விவேகமே முத்தி

9. நெல்லை. க. சுப்பிரமணியன், *சாங்கியகாரிகை*, திருநெல் வேலி-6 (1980), நூற்பா. 21.

10. *சிவஞானசித்தியார்*, 263.

என்று நீ கூறுகிறாய். பந்தம் விவேகத்தினால் மட்டும் நீங்காது; பந்தத்தை நீக்குவதற்குப் பந்தத்தை ஏற்படுத்திய இறைவனால் மட்டுமே முடியும். இறையருளால்தான் தளை நீங்கும். அது நீங்கும் பொருட்டுச் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நெறிகளில் நின்று தொண்டு பூண்டு நின்மலனாகிய இறைவனின் திருவருளால் பந்தத்தை நீக்கிக்கொள்க.

பெந்த முத்தி பற்றிச் சாங்கியம் :

பிரகிருதி தத்துவமானது முக்குணங்களும் சமமாய் நின்ற நிலை. புத்தி முதல் நிலம் ஈறாகிய தத்துவங்கள் இருபத்து மூன்றும் தோன்றுவதற்கு அதுவே நிலைக்களம். அவித்தை வசத்தால் அதனுடன் பிணிப்புற்ற புருடன், மழவின் செய்தியைப்போல் பேதைமையைப் பொருந்திப் பல் பிறவிகளையும் எடுத்து இன்ப துன்பங்களை நுகர்வான். இது பெத்தம், சேதனனாகிய புருடன் தன்னிலிருந்து முற்றும் முரணான அசேதனப் பிரகிருதியின் புன்மையைப் பாகுபடுத்தி யுணர்ந்து, புத்தியைப் பொருந்திய அவித்தை நீங்கி, விகுதியாலுண்டாகும் இன்பதுன்பங்கள் பகுதிக் குரியன என்று கண்டு முக்குணங்களும் அடங்கி நிற்பான். இது முத்தி. இவ்வாறு பரபக்கமாக நிரீச்சுர சாங்கியம் சித்தாந்த சைவ நூல்களில் சுருக்கமாக உரைக்கப்பட்டுள்ளது.

முடிவுரை :

நிரீச்சுர சாங்கியன் மதமும் அவன் மதமறுதலையும் சிவஞான சித்தியாரில் சில்வகைச் சொற்களில் பொதிந்து வைக்கப்பட்டுள் ளதனைச் சற்றே விளக்க முற்பட்டதே இக் கட்டுரை. "சாங்கி யம் தனிக் கொள்கையாக இன்று வழங்காமற் போனாலும், இதன் எதிரொலி கேளாத மதங்களே இந்தியாவில் இல்லை"[11] என்பது இங்குக் கருதத்தக்கது.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

—திருக்குறள் 354

---

11. கலைக்களஞ்சியம், IV தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை-(1956) ப. 546.

தமிழ் இசைத்துறை வளர...

[பேராசிரியர் வீ. ப. கா சுந்தரம்

இறையியல் கல்லூரி, மதுரை.]

['செந்தமிழ்ச் செல்வி' நாட்டு நலத்திற்காகப் புதிய செய்திகளை முன்னோடியாக முதன் முதல் தந்து, நன்மை செய்ய நாளும் தூண்டியுள்ளது. இவ் வுண்மை செல்வியின் செவ்விய முன் இதழ்களை ஆய்ந்து பார்த்தால், அறியலாகும். இசைத் துறையில் இனிச் செய்ய வேண்டிய இனிய பணிகள் எவை எவை என, இக் கட்டுரை சிந்தித்துத் தருகிறது. தமிழ் இசையியல் பூத்துப் புதுமை பெற்றுக் குலுங்க வேண்டும்; அதற்கு என்ன செய்தல் வேண்டும்?—என்று கட்டுரைக்குமாறு கழக ஆட்சியாளர் பணிக்க, இக் கட்டுரை மலர்கிறது.]

இசையின் இரு பிரிவுகள் :

இசையை இரு துறைகளாகப் பிரிக்கலாம். அவற்றைப் 'பாடுதுறை' என்றும் 'இசை இயல்துறை' என்றும் கூறுதல் வேண்டும். பாடுதுறை என்பதை, ஆங்கிலத்தில் 'பிராக்டிக்கல்' என்பர். இசையியலை 'தியரி' என்பர். "பாடுதுறை முற்றிய...... கேள்வி"—என்னும் சிறுபாணாற்றுப் படைத் (227) தொடரால், இப் பிரிவின் பழமையறியலாம்.

'பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே'—(புறம். 21. 11.) என்பதால்—இசைபாடும் வேந்தர்கள் இருந்தமை அறியலாம். இசையியல் எனும் சொற்றொடர் புதிதாக ஆக்கப்பட்டது. 'மியூசிக் காலஜி' (Music Cology) எனும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்—இசையியல் என்பது. இந்த ஆங்கிலச் சொல் 19ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஆங்கில அகராதிகளில் இடம் பெற்றது.

இசையியல் என்பது என்ன ?

இசையின்—இலக்கணம், வரலாறு, கூறுவதே இசையியல். இதிலே பாடுதுறை தவிர, இசை பற்றிய செய்திகள் அனைத்தும் அடங்கும். கோவை இயல் (சுரஇயல்), பண்ணியல், தாளவியல், கொட்டு முழக்காகிய இசைக் காலக் கணக்கியல், இசைக் கருவி களின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, இசைப் பெரியார்களின் வரலாறு அனைத்தும் அடங்கியதே 'இசையியல்.'

பாடுதுறை வளர்ச்சி :

அரசர் அண்ணாமலைப் பெருந்தகையார், தமிழிசை இயக்கம் தொடங்கினார். இதன் பயனாகத் தமிழிசைக் கீர்த்தனைகள் புதியன மலர்ந்தன. தமிழிசைக் கீர்த்தனை நூல்கள் பலப் பல வெளி வந்தன. மலைபோன்று பெரும்பணி செய்த அண்ணாமலையாரைத் தமிழக வரலாறு என்றும் வாழ்த்தும்.

தமிழிசையியல் வளராமை :

தமிழிசை இயக்கத்தை ஒரு பொற்காசு எனலாம்; பொற் காசுக்கு இரு பக்கம்; ஒரு பக்கம்—பாடுதுறை; இது நன்கு வளர்ந்து ஒளி பெற்றுள்ளது. மறுபக்கம்—இசையியல்; இது வளராமல் மங்கி இருண்டு கிடக்கின்றது. இசை இலக்கணம், இசை வரலாறு, இசைத் துறைச் சொற்கள் முதலியவை வளர்ச்சி யுறாமல் வறண்டு இருண்டு கிடக்கின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 'இசையியல்' என்னும் நூலை (1944) வெளியிட்டுள்ளது. இதிலே சொற்கள் எல்லாம் வாய்க்கு வராத வடசொற்கள்; செய்திகள் எல்லாம் வடமொழி நூலிலிருந்து திரட்டியவை; இது மிக மிக வருந்தத்தக்கது. இந் நூலே (பக்கம் 133) :—"பரதரால் எழுதப்பட்ட நாட்டியசாத்திரமும் சங்கீத ரத்னாகரமுமே கருநாடக சங்கீதத்திற்கு முதல் நூல்க ளாகக் கொள்ளப்பட்டன" என்று கூறுகிறது. எனவே அண்ணா மலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள இசையியல் எனும் நூல்—தமிழிசை இலக்கண நூலாகக் கொள்ள முடியாது.

அந் நூலினின்றும் சில எடுத்துக்காட்டுகள் :—ஆகதம், அநாகதம், வியக்தம், அவியக்தம், சுருதி, ஸ்தாயி, சப்ததாளம், கிருதி, ஆரோகி, அவரோகி, சஞ்சாரி, பிருதம், கிரகசுரப் பிரபந்தம்' முக்த பதக்கிரத்தம், டாயம், தட்சிணம், வார்த்திகம், நிஷ்கிராமம், விட்சேபம், விட்சிபதம், பிபீலிகம், பிலாவிதம், நாமிதம், மிசுருதம் —இப்படிப் பலப் பல சொற்கள். வடமொழி இசையியலை எழுதிக் கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழிசையியல் என்ப் பொம்மை காட்டிப் பொய்யாகக் கற்பித்து வரும் நிலையே இன்று வரை இருந்து வருகிறது. இந் நிலையே தமிழக அரசினரின் இசைக் கல்லூரிகளிலும் நிலவுகிறது. வழிகாட்டியாகிய அண்ணா மலைப் பல்கலைக் கழகம், தவறான வழி காட்டிவிட்டது. தென்னக முழுதும் அரசுக் கல்லூரிகள் பின்பற்றுகின்றன.

தமிழ்மொழியில் கண்ட தமிழிசை துளிர்க்க வேண்டும்

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சேந்தன் திவாகரம், பிங்கலம் ஆகிய நூல்கள் தொன்மைக் காலத் தமிழிசை

நிலையைக் கூறுவன. வளர்ந்தோங்கிய இசை நிலையைப் பற்றிச் சிலப்பதிகாரத்திலும் அதன் அரும்பத உரையிலும், அடியார்க்கு நல்லார் உரை வளத்திலும் காணலாம். சிலப்பதி காரத்தில் இசையியல் குவிந்து மலை மலையாய் உள்ளது. அதற்கடுத்து, தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம், மணி மேகலை, சீவக சிந்தாமணி, யாப்பருங்கல விருத்தியுரை, கல்லாடம், பெரிய புராணம் முதல்—திருவிளையாடற் புராணம் வரை உள்ள தமிழ் இலக்கியக் கருவூலங்களில் இசைக் கருத்துகள் ஆங்கு ஆங்கு, மழை நீர், குழிகளில் நிறைந்து நிற்பதுபோல் நிறைந்து நிற்கின்றன. அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் வாரி வழங்கியும் உலகப் பெரும் இசை நூல்கள் கண்டும்—புது இசை இலக்கண நூல்கள், இசையியல் நூல்கள், இசை வரலாற்று நூல்கள் எழுதுதல் வேண்டும்.

இவற்றைத் தெலுங்குக் கீர்த்தனை பாடும் இசை மேதை களால் எழுத முடியாது—வடமொழிதான் தெய்வ மொழி என்று வழக்காடுவோரால் எழுத முடியாது. தமிழ் இலக்கிய அறிவும் இசை அறிவும் படைத்த தமிழ்ப் பெரும் புலமையோரால் மட்டுமே எழுத முடியும். பாடுதுறை முற்ருது, தமிழ் இலக்கிய அறிவு மட் டும் வைத்துக்கொண்டு, இசையியல் எழுதுவதாலும் பிழை பல நேரிடும். நேரிட்டுள்ளது. (தொடரும்)

என்றும் இன்பமே!

[புலவர் எழில்வாணன், பள்ளபட்டி.]

ஆழ்ந்து கல்வியைக் கற்பதும்
　　ஆசான் வழியில் செல்வதும்
சூழ்ந்து பின்பே செய்வதும்
　　சூதினை ஒழித்து வாழ்வதும்
தாழ்ந்து நல்வழி நிற்பதும்
　　தாயினைத் தெய்வாய் நினைப்பதும்
வாழ்ந்து புகழ்பெற முயல்வதும்
　　வையகந் தன்னில் இன்பமே!

விலைமகள் அறியா திருப்பதும்
　　விருந்து பேணிக் காப்பதும்
தலைமகள் அன்பைப் பெறுவதும்
　　தகுதியை அறிந்தே ஏற்பதும்
அலைமகள் ஆட்டைத் தணிப்பதும்
　　ஆர்வங் கொண்டே உழைப்பதும்
மலைமகள் அழகைச் சுவைப்பதும்
　　மனதிற் கென்றும் இன்பமே!

வாழ்த்தி வரவேற்கிறோம்

அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரும் பான்மை இடங்களைப் பெற்று மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். மக்களாட்சி முறைப்படி உயர்திரு. ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் பதவி ஏற்றிருக்கும் அமைச்சர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பெரியார் அவர்களின் கொள்கை அடிப்படையிலும், அவர் வழிவந்த அண்ணா அவர்களின் அரசியல் கருத்திற்கேற்பவும், திராவிடரின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டும் நல்ல ஆட்சி நடத்துவர் என முடிவு செய்து மக்கள் ஆட்சிப் பொறுப்பினை இவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

எனவே கழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்—தமிழர்—தமிழ் நாடு என்னும் ஒப்பற்ற முப்பற்றினையே குறிக்கோளாகக் கொண்டு எங்கும் எதிலும் தமிழ்—எங்கும் எப் பொறுப்பிலும் தமிழர்—எந் நாளும் எச் செயலிலும் தமிழகத்தில் முன்னேற்றம் என வகுத்துக் கொண்டு அண்ணா அவர்கள் கூறிய கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு களைக் காத்து, பெரியார் அவர்களின் சீர்திருத்தக் கருத்துக்களுக்கு அரண் செய்து நல்லாட்சியினை நடத்துவர் என எதிர்பார்க்கிறோம்.

ஏனெனில் மற்ற அரசியல் கட்சிகளைப் போன்று வெறும் பொருளாதார அரசியலை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் தமிழினத்தின் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியனவும் காக்கப்படல் வேண்டும் என்னும் அக்கறை திராவிட இயக்கத்தினர்க்கு மட்டுமே உண்டு. தமிழர்க்கு மொழிப்பற்றும், இனப்பற்றும் அற்றுப் போகுமேயானால் அவர்கட்கு வாழ்வில்லை என்பது பெரியார்—அண்ணா—மறைமலையடிகளார் போன்ற பெருந்தலைவர்கள் கண்ட முடிவாகும்.

ஆகவே, ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கும் புதிய அமைச்சரவை இனப்பற்று, மொழிப்பற்று என்பனவெல்லாம் குறுகிய மனப்பான்மை எனக் கருதாமலும். தமிழ்மொழி—இன நலன்களுக்கு ஊறுவிளைப் போரின் அச்சுறுத்தல்கட்கு அஞ்சாமலும், தமிழ்ப்பகைவர்களின் புன்னகைக்கும் இன் சொலுக்கும் மயங்காமலும்

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இனநலமும், மொழி நலமும் நாடி நல்லாட்சி நடத்துவார்களாக! வாழ்க தமிழக அரசு! வளர்க தமிழ் நாடு! வெல்க தமிழினம்.

———

தமிழின் நெருக்கடி நிலை

அகப்பகையும் புறப்பகையுமாகிய தமிழ்ப் பகைவர் தமிழை ஒழித்தற்குப் பல்வேறு வகையில் மறைமுகமாகவும் வெளிப்படை யாகவும் கடந்த மூவாயிரவாண்டு செய்துவரும் முயற்சி இன்று முற்றியிருப்பதால், தமிழுக்கு ஒருபெரு நெருக்கடி நிலைமை நேர்ந் துள்ளது. இதை விரைந்து தவிர்க்க ஒரு கடும் போராட்டம் நிகழும். இதுவே உறுதியான வெற்றி பெறும் இறுதி முயற்சி.

உண்மைத் தமிழர் அனைவரும், சிறப்பாகத் தமிழ் மாணவரும் ஆசிரியரும் புலவரும் பேராசிரியரும், "எங்கெழிலென் ஞாயி றெமக்கு" என்றும், மண்டெரிதான்வாய் மடுப்பினும் போராது பெருமூச்செறிந்து கண்டுயிலும் மாசுணம் போன்றும், இராது உடனே விழித்தெழுக. இப் போராட்டத்திற்கு இன்றியமையாத கருவியாகிய 'செந்தமிழ்ச் செல்வி'யை, ஒவ்வோர் ஊரிலும் பள்ளி யிலும் கல்லூரியிலும் பொது நூலகத்திலும் கோயிலிலும் மடத் திலும் புலவரில்லத்திலும் வாங்கி, பல்லாயிரக் கணக்கான படிகளை நாடு முழுதும் பரப்புதற்கு ஏற்பாடு செய்க.

தண்டமிழ்த்தொண்டன்,

ஞா தேவநேயன்

அறிந்தார் அறிவிக்க

தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் மூத்தமகனுரான சோதிபாண்டிய னுடு சேர்ந்து இசைத் தமிழாராய்ச்சி செய்த ஒரு பெருமகனுர், தம் மாணவர் பதின்மருடன் சென்ற பொங்கல் திருநாள் என் உறையுள் வந்து, ஓர் இசைத் தமிழாராய்ச்சி மன்றம் தோற்றுவித்தார். விடை யாடவையாகிய 'சூன்' மாதத்திற்குப் பின் வருமாறு சொன்னேன். அவரையறிந்தவர் அவரை உடனே என்னிடம் வரச்சொல்க, அல்லது அவர் முகவரியைத் தெரிவிக்க.

ஞா. தேவநேயன்,

எசு. பி. (S.P.) 57, க. க. நகர்,

சென்னை-78.

டாக்டர் சொல்விளங்கும் பெருமாள்
டாக்டர் சக்திப்பெருமாள் பாராட்டுவிழா

அண்மையில் முனைவர் (டாக்டர் பி. எச்டி) பட்டம் பெற்றிருக்கும் பேராசிரியர்கள் திரு. பூ. சொல்விளங்கும் பெருமாள், திருமதி சக்திப் பெருமாள் இருவர்க்கும், 18—5—1980 ஞாயிறு மாலே, மதுரை கீரைத்துறையில் உள்ள அருப்புக்கோட்டை நாடார் மகளிர் மேல்நிலேப்பள்ளியில் பாராட்டுவிழா நடைபெற்றது. விழாவிற்கு நா. ம. ச. சு. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி ஆட்சிக்குழுத் தலைவர் கல்வித் தந்தை உயர்திரு. ப. ராமுத்துச்சாமி அவர்கள் தலைமை தாங்கினுர்கள். சரசுவதி நாராயணன் கல்லூரிப் பேராசிரியர் திரு. மு. இளமாறன் வரவேற்புரை நிகழ்த்தினுர். பாராட்டுக்குரிய பேராசிரியர்களுக்கும் சிறப்பு விருந்தினர்க்கும் திரு. பே. தேவசகாயம் அவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்கள். விழாக் குழுவின் சார்பில் டாக்டர் தம்பதிகளுக்குத் தில்லை நடராசரின் அழகிய திருவுருவச் சிலையமைந்த நினைவுப் பேழையினை ம. நா. உ. ஜெயராஜ் நாடார் மேல்நிலைப்பள்ளித் தாளாளர் திரு. ஏ. பி. எஸ். சிங்காரவேலு அவர்கள் வழங்கினுர்கள். மதுரையில் உள்ள அருப்புக்கோட்டை நாடார் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு டாக்டர் திரு. பூ. சொல்விளங்கும் பெருமாள் அவர்கள் பெயரால் ரூ. 500க்கும், டாக்டர். திருமதி சக்திப் பெருமாள் அவர்கள் பெயரால் ரூ. 500க்கும் அறக்கட்டளைகள் நிறுவி அவற்றின் வருவாயிலிருந்து ஆண்டுதோறும் 12, 10ஆம் வகுப்பு அரசினர் பொதுத் தேர்வுகளில் தமிழில் முதன்மை பெற்றுத் தேறும் மாணவியர்க்குப் பதக்கம் வழங்கிவருவதற்காகக் காசோலைகளைத் திரு ஏ. பி. எஸ். சிங்காரவேலு அவர்களும், செல்வி இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளர் திரு. ஏ. சௌந்தரபாண்டியன் அவர்களும் வழங்கினுர்கள். பேராசிரியர்களைப் பாராட்டி கல்லூரி முதல்வர்கள், தமிழ்த்துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மற்றும் அறிஞர் பெருமக்கள் பலர் சிறப்புரை ஆற்றினர். டாக்டர் திருமதி சக்திப்பெருமாள் அவர்களின் ஆய்வு நூலாகிய "தமிழ் நாடக வரலாறு" நூலினை வெளியிட்டு அருள்நெறித்தந்தை தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேருரையாற்றினுர்கள்.

பேராசிரியர்கள் இருவரும் ஏற்புரை நிகழ்த்தித் தம் எதிர்காலத் திட்டங்களை வெளியிட்டனர். விழாவின் வெற்றிக்குப் பாடுபட்ட பேராசிரியர். மு. இளமாறனுக்குத் திரு. கே. வி. இரத்தினசாமி அவர்கள் பொன்னுடை போர்த்தினுர்கள். திரு. எம். விஜயராஜன், பி.காம். அவர்கள் நன்றிகூற நாட்டுப் பண்ணுடன் விழா இனிது நிறைவேறியது.

———

"நாமென உழைப்போம்"

[செல்வக் கண்ணன்]

மேசையின் மேலே மெழுகு வத்தியை
ஏற்றி வைக்கவும் ஒளிச்சுடர் பொழிந்தது :
ஒளிச்சுடர் அறையை உயரிய நிலையில்
ஆட்சி கொண்டது ;
அப்பொழுது நினைத்தது மெழுகு :
"நானே உருகி நல்லொளி தருவேன்"
திரியோ நினைத்தது :
"நானே கருகிக் கவினொளி தருவேன்"
தீயும் நினைத்தது :
"நானில்லை என்றால் இந்த மெழுகும் திரியும்
ஒளியைத் தருமோ ?"
மூன்றும் முரணாய் நினைத்தன :
முட்டிக் கொண்டு வந்தது காற்று.
மோதித் தாக்கி மூன்றன் பெருமையும்
ஒன்றாய் ஒழியச் சுடரை அணைத்தது ;
மூன்றும் ஒன்றாய்க் கேட்டன :
"நாங்கள் மூவரும் செருக்குடன் எண்ணிச்
சிறுதனம் ஆனது உண்மை; ஆனால்,
உன்னைப்போல அரக்கத் தனமாய்
அழித்திட வில்லை; அறிக."

காற்றுச் சொன்னது :
"தாக்குதல் நேர்ந்ததும் ஒன்றாய் நின்றீர் !
தக்க பொழுதில் அதையேன் மறந்தீர் !
ஒருவர் செயலால் உலகம் இல்லை !
ஒவ்வொரு பேரும் ஒற்றுமை யாக
உழைத்த போதுதான் உலகம் உய்யும் ;
இதோ காண்க.
அணைத்த நானே ஆவியைத் தருவேன் ;
நானில்லை என்றால், தீயும் பற்றுமோ ?
தீயில்லை என்றால், திரியும் எரியுமோ ?
மெழுகும் உருகுமோ? சுடரும் பொழியுமோ?
ஆதலால், ஒன்றாய்க் கூடி உழைப்போம் ;
உலகம் வாழ வாழ்வோம் !

மூன்றும் மொழிந்தன :
"நல்லதே நவின்றாய் காற்றே !
நானெனல் ஒழிப்போம் :
நாமென உழைப்போம்
நல்லறி வுரைத்த உனக்கெம் நன்றி !"

———

செய்திகளும் குறிப்புக்களும்

டாக்டர் சொ. சிங்காரவேலனுர்க்குத் தமிழாகரர் பட்டம்

கழக நூலாசிரியரும், செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினரும், மாயூரம் அ. வ. அறத்துறைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமாகிய டாக்டர் சொ. சிங்காரவேலனுர்க்கு 23—5—80இல் திருப்பத்தூர் தமிழ்ச் சங்கத் திருமுறை விழாவில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் "தமிழாகரர்" என்ற செந்தமிழ்ச் சிறப்புப் பட்டம் சூட்டிப் பொன்னுடை போர்த்திப் பாராட்டினுர்கள். திரு. சிங்காரவேலனுர் எழுதிய "புதுமைக் குரல்" என்னும் நூலையும் அடிகளார் வெளியிட்டு உளமார வாழ்த்தினுர்கள். தமிழாகரர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். தமிழாகரருக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

அறிவியக்க மாநாடு

வண்டலூர் அறிவியக்கப் பேரவையின் சார்பில் 18—5—80இல் சென்னை மாவட்ட மைய நூலகப் பேரரங்கில் முனைவர் சாலை இளந் திரையன் அவர்கள் தலைமையில் அறிவியக்க மாநாடு நடைபெற்றது. சேலம் அ. சித்தையன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினுர். ஈரோடு அரங்க நாராயணசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றினுர். நாடாளுமன்ற உறுப்பினர் கே. இராமமூர்த்தி மாநாட்டுச் சிறப்பு மலரினை வெளி யிட்டார். கவிஞர் சுரதா, திருவாரூர் தங்கராசு ஆகியோர் எழுச்சியுரை ஆற்றினர். மாலையில் நடைபெற்ற கருத்தரங்கில் நெ. து. சுந்தர வடிவேலு, ஏ. பி. சனர்த்தனம், முனைவர் சாலினி இளந்திரையன், கலியபெருமாள் மற்றும் அறிஞர் பலர் உரையாற்றினர். இம் மாநாட் டினையொட்டி அறிவு நெறி விளக்கக் கண்காட்சியொன்றும் அமைக்கப் பட்டிருந்தது.

இராசேந்திர சோழன் பெருவிழா

கங்கை கொண்ட சோழன் எனப் பட்டம் பூண்ட முதலாம் இராசேந்திர சோழனின் புகழ்மிகு விழா மேத் திங்கள் 16, 17, 18 ஆம் நாள்களில் தமிழ்நாட்டரசு மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால், கங்கை கொண்ட சோழபுரம், மாளிகை மேட்டில் இராசேந்திர சோழன் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. விழாவிற்குப் புலவர் கி. வா. சகந்நாதன் தலைமை தாங்கினுர். கல்வித் துறை உதவிச் செயலாளர் திருமதி கரியாளி தொடக்கவுரை நிகழ்த்தினுர். முனைவர் மா. நன்னன் அவர்கள் கண்காட்சியினைத் திறந்து வைத்தார். முனைவர்கள் ஔவை நடராசன், சி. பாலசுப்பிர மணியம், திரு. மு. அருணுசலம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இவ் விழா சங்கப் பலகை—அரங்கம் 1, 2, 3, 4 என முறையே நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவினை

யொட்டி கலை நிகழ்ச்சி, நாடகம், வாணவேடிக்கை ஆகியனவும் நடைபெற்றன. கருத்தரங்கில் அறிஞர்கள் பலர் உரையாற்றினர்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 96ஆம் ஆண்டு நிறைவுவிழா

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 96ஆம் ஆண்டு நிறைவுவிழா மே, 31 ஜுன் 1ஆம் நாள்களில் தூத்துக்குடி திருமந்திரநகர் வடக்கு ரதவீதியிலுள்ள சம்பந்த மூர்த்தி சுவாமிகள் மடாலயத்தின் கீழ்ப்புறம் அமைக்கப்பெற்ற சிவஞானப் பந்தலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். சபைத் தலைவர் திரு. எம். எஸ். இராமையா பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். தமிழவேள் குலபதி திரு. எ. பி. சி. வீரபாகு அவர்கள் தொடக்கவுரை ஆற்றினர். திருவாளர்கள் சுகிசிவம், ச. சிவகுமார், திருவாட்டி சரசுவதி இராமநாதன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

சேக்கிழார் குருபூசை விழா

சேலம் செவ்வாய்ப்பேட்டை அருள்மிகு இராமலிங்க சௌடேஸ்வரியம்மன் திருக்கோயிலில் 19—5—80 அன்று பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் தலைமையில் சேக்கிழார் குருபூசை விழா நடைபெற்றது. திரு. கோ. அப்பாய் செட்டியார் அ. மாணிக்கம் அவர்கள் அளித்த கிழக்கு வாசல் கம்பிக் கதவினைத் தலைவரவர்கள் திறந்து வைத்தனர். பின்னர்ச் ‘சேக்கிழாரும் பெரிய புராணமும்’ என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். ‘பெரியபுராணத்தில் உய்யுநெறி’ என்னும் பொருள்பற்றி திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்களும், ‘இன்றைய சமுதாயத்திற்கு ஏற்ற புராணம்’ என்னும் பொருள்பற்றி பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்களும் அரிய சொற்பொழிவாற்றினர்.

தென்காசி திருவள்ளுவர் கழக விழாக்கள்

தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் 53ஆவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி, முறையே மே 29, 30, 31 ஜுன் 1ஆம் நாள்களில் திருக்குறள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு. ஆ. முத்துக் குமாரசாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் முதல் நாள் விழாவும், திருக்குறள் பேரவை முன்னவர் ஔவை நடராசன் அவர்கள் தலைமையிலும், இரண்டாம் நாள் விழா கவிஞர் இளங்கம்பன் அவர்கள் தலைமையிலும் மூன்றும் நாள் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டி மண்டபமும், நான்காம் நாள் திருக்குறளார் வி. முனிசாமி அவர்கள் தலைமையில் ஆய்வரங்கமும் நடைபெற்றன. அறிஞர் பலர் உரையாற்றினர். இவ் விழாவினையொட்டிக் கலை நிகழ்ச்சிகளும், நடைபெற்றன. ஜுன் 2ஆம் நாள் முதல் 5ஆம் நாள் முடிய முதுபெரும் புலவர் அ. நடேச முதலியார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

திருக்கழுக்குன்றம் திருஞானசம்பந்தர் இசைவிழா

சூன் திங்கள் 6, 7, 8 ஆம் தேதிகளில், திருக்கழுக்குன்றம் நால்வர் பேட்டை நால்வர் கோயிலில் திருஞான சம்பந்தர் இசைவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மூன்று நாள்களும் ஓதுவார்களும் இசைக் கலைஞர்களும் திருமுறை இசை அரங்கு நிகழ்த்தினர், விழாவிற்கு உயர்திரு. ஒ. வி. அழகேசன் அவர்கள் தலைமை தாங்கினர். உயர்நீதி மன்ற நடுவர் எஸ் மோகன் அவர்கள் இசை விழாவினைத் தொடங்கி வைத்தார். இரண்டாம் நாள் விழாவிற்குக் காஞ்சி சிலத்திரு ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளும் மூன்றும் நாள் விழாவிற்கு அறநிலையத்துறை ஆணையர் உயர்திரு வி எஸ். கோதண்டபாணி பி.எசி., பி.எல். அவர்களும் தலைமை தாங்கினர். திருவாளர்கள் எஸ். சிவகுமார், எம்.ஏ., ந. இரா. முருகவேள் மற்றும் அறிஞர் பலரும் சொற்பொழிவாற்றினர்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களுக்கு இரங்கற் கூட்டங்கள்

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தின் சார்பில் மயிலை சினி. வேங்கடசாமி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து, கீழ்க்கண்டவர்கள் பேசினர்கள். ஊ. ஜயராமன். மா. சு. சம்பந்தன், சிலம்பொலி செல்லப்பன், சிறுவை மோகனசுந்தரம், வேதம் வெங்கட்டராய சாஸ்திரி, கே. பக்தவத்சலம் வரவேற்புரையும், சி. ர. பழம்நீ நன்றியுரையும் ஆற்றினர்.

கவிஞர் பெருமன்றத்தின் சார்பில் சென்னை மாவட்ட நூலகக் கட்டிடத்தில் 8—6—80 மாலை 6-30 மணிக்குத் திரு நல். முருகேச முதலியார் தலைமையில் ஓர் இரங்கற்கூட்டம் நடைபெற்றது. மயிலை சினி வேங்கடசாமி அவர்கள் படத்தைச் சிறுவை. மோகனசுந்தரம் திறந்து வைத்துப் பேசினர். அவ்வமயம் சோ. சிவபாத சுந்தரம், ஊ. ஜயராமன், மா சு. சம்பந்தன், பேராசிரியர் பிச்சைமுத்து, வா. மு. சேதுராமன், புலவர் கண்ணன் ஆகியோரும் பேசினர்.

புதுவைத் தனித்தமிழ்க் கழகத்தின் சார்பில் பேராசிரியர் ம. ரா. பூபதி அவர்கள் தலைமையில் மயிலை சினி. வேங்கடசாமி அவர்கள் நினைவுக் கருத்தரங்கம் நடைபெற்றது. அறிஞர் பலர் மறைந்த ஆராய்ச்சிப் பேரறிஞரின் ஆராய்ச்சித் திறனைப் பாராட்டிப் பேசினர்.

கையறுநிலை

[மயிலம், ஆ. சிவலிங்கனுர்.]

உண்மை யுழைப்பாளர் ஓங்கு தமிழறிஞர்
வண்மை தருமயிலை வந்தவராம் ஒண் சீனி
வேங்கட சாமியவர் வேறுலகம் சென்றாரே
யாங்கிடக் தேங்கவே யின்று.

தஞ்சை வித்துவான் அ. வடிவேலன் மறைவு

தஞ்சை கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி முன்னாள் தலைமைத் தமிழாசிரியரும், சரசுவதிமகால் மதிப்பியல் செயலாளருமாயிருந்த பெரும்புலவர் அ. வடிவேலன் அவர்கள் கடந்த 29—4—80இல் தமது 71ஆவது அகவையில் இறையடி சேர்ந்தார்கள் என்ற செய்தி யறிந்து வருந்துகிறோம். மறைந்த புலவரவர்களின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ௩௪-௪௯௨ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு.	வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	ரூ. 10—00
,,	ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள், கழக மேலாளர்	5—00
,,	சொ. சுப்பிரமணிய பிள்ளை (தமது 79ஆவது பிறந்தநாள்விழா நன்கொடை)	10 - 00
,,	A. T. A. ஈசுவர் அவர்கள், சென்னை	5—00

மதிப்புரை

அச்சும் பதிப்பும்

[ஆசிரியர் திரு. மா. சு. சம்பந்தன்; வெளியீடு : தமிழர் பதிப்பகம், 243 லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-1. பக். 32+608+படங்கள் 36 பக்கம். விலை ரூ. 30-00.]

'அச்சுக்கலை' என்னும் அருமையான நூலை ஆக்கித் தந்த திரு. மா. சு. சம்பந்தன் அவர்களே இந் நூலையும் இயற்றியுள்ளார்கள். இந் நூலை மேலோட்டமாகத் திருப்புவாரும் ஆசிரியர்தம் உழைப்பாற் றலையும், உழைப்பை ஒழுங்குபடுத்தி ஒளியுறுத்தும் திறத்தையும் ஒருங்கே கண்டு உவப்படைவர். இதனை, அச்சுத்தொழில் பதிப்புக் கலைகளுக்கு அமைந்த கலைக் களஞ்சியம் எனக் கருத்துடையார் கண்டு களிப்பர்.

எழுத்தின் தோற்றத்தில் இருந்து தொடங்கும் நூல், அதன் வளர்ச்சி, அச்சுக்கலைத் தோற்றம், அச்சகங்கள், அச்சடிப்பு, பதிப்பா ளர்கள் ஆகியவற்றைப் பன்னிரு தலைப்புகளில் விரிவாகக் கொண்டு இயல்கின்றது. நூலாசிரியர், பதிப்பாசிரியர், பழங்காலப் பள்ளிக் கூடங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றைப் பற்றிய அரிய கருத்து களையும் ஒரு தொகுப்பாக அறிந்துகொள்ள இந்நூல் உதவுகின்றது.

எடுத்துக் கொண்ட கருத்துகளை வலியுறுத்த எழுபதிற்கு மேற் பட்ட நூல்களையும், கட்டுரைகளையும் மேற்கோள் காட்டியுள்ளார் ஆசிரியர். அவற்றையும் பொன்னில் பதித்த மணியெனப் பொலிவுறுத்து

ஞர். இந்நூல் இயற்றுதற்கு எழுந்த உணர்வையும், அது வளர்ந்த வகையையும், உற்ற துணைகளையும் பற்றி ஆசிரியர் தம் முன்னுரையில் சுட்டியுள்ள குறிப்பு நூலாய்வு மேற்கொள்வாரின் மதிப்பீட்டுக்கு நல்ல சான்றாகும். முதுபெரும் புலவர் திரு. மே. வீ. வே. அவர்கள் திறனாய்வு முறையில் வழங்கியுள்ள 'அணிந்துரை' சிறக்கின்றது.

"இந்திய மொழிகளில் முதன்முதலாக அச்சடிக்கப்பட்டு மேல் நாட்டில் வெளிவந்த நூல்" தமிழ்நூலே - பக். 34.

"இந்திய நாட்டில் முதல் அச்சுக் கண்ட தமிழ் நூல் 1557ஆம் ஆண்டில் கொல்லத்தில் அச்சடிக்கப்பட்ட 'தம்பிரான் வணக்கம்' என்னும் நூலேயாகும்" (45)

"கி. பி. 1577ஆம் ஆண்டு கோவா நகரில் தமிழ் எழுத்துகள் முதன் முதலாக உண்டாக்கப்பட்டன" (42)

"தரங்கம் பாடியில் முதல் அச்சுக்கூடம் 1712இல் நிறுவப் பட்டது. இதுவே தமிழகத்தில் ஏற்பட்ட முதல் அச்சுக் கூடம்" (68)

"1713இல் பொறையாற்றில் அச்சு வார்ப்படச் சாலை அமைக்கப்பெற்றது. இதுவே தமிழகத்தில் - ஏன் - இந்தியா விலும் முதன் முதலாக நிறுவப்பெற்ற அச்சு வார்ப்படச் சாலை யாகும்" (70)

"புதிய ஏற்பாடு 1715இல் அச்சேறியது. இந்தியாவிலே முதன் முதலாகப் புத்தக உருவில் வெளிவந்த விவிலியநூல் இத் தமிழ் மொழிபெயர்ப்பே ஆகும்" (71)

"சென்னை அரசாங்க அச்சகம் இந்தியாவிலேயே மிகப் பெரிய அச்சகமாகும். ஏன், சூயசுக்குக் கிழக்கே பெரியதோர் அச்சக மாகவும் புகழ்பெற்றுத் திகழ்கிறது" (459)

"இந்திய மொழிகள் அனைத்தினுள்ளும் தமிழில்தான் முதன் முதலாகப் பாரத இராமாயணங்கள் வடமொழியைத் தழுவி இயற்றப்பெற்றுள்ளன" (459)

இத்தனை 'முதல்'களையும் சான்றுடன் விளக்கும் 'முதலா'கத் திகழ்கிறது அச்சும் பதிப்பும். இத்தகு புலமை நூல் புலமையாளர் பேழைகளிலெல்லாம் கட்டாயம் இருத்தல் வேண்டும். அகர வரிசை நூல்போல் பயன்படுத்துதலும் வேண்டும்! மொத்தத்தில் தமிழ் நூல் அச்சும் பதிப்பும் பற்றிய அரிய வரலாற்று நூல்.

மாசிலாத் தொண்டர் மா. சு. சம்பந்தனார் வாழ்க! அவர்தம் அருந்தமிழ்த் தொண்டு வளர்க!

—இரா. இளங்குமரன்

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

அப்பர் அச்சகம், சென்னை-1.